கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

இலங்கையின் 66வது சுதந்திர தினம்

சுதந்திர தீபம் ஒளிரட்டும்
நாளைய பொழுது
நமதாய் விடியட்டும்




பக்கம் 03 இயேசுவை கோயிலில் அர்ப்பணித்தல்

பக்கம் 8-9 தேசிய துறவறத்தோர் தினம்

பக்கம் 12 மெஜிகோரி அன்னை

02.02.2014 - 02 மாசி, 2014 - (ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 04, கதிர் - 80 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD / 37 / NEWS / 2014

# எமது இலங்கை தாய்த் திரு நாட்டின் 66வது சுதந்திர தினம்

# இன மத குல பேதமின்றி ஒரே சமூகமாக ஒரு நாட்டின் குடிமக்களாக வாழுவோம்

## கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் சுதந்திர தினச் செய்தி



இம்மாதம் 4ஆம் திகதி எமது தாய் நாடாம் இலங்கை திருநாட்டின் 66வது சுதந்திர தினமாகும். நாம் அன்னியரின் ஆதிக்கத்தில் இருந்து விடுதலைப் பெற்ற 66வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாம் அனைவரும் மகிழ்ச்சி அடையும் நாளாகும். எமது நாட்டின் சுதந்திரத்திற்காக போராடிய அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்து கொள்வதோடு அந்த சுதந்திரத்தை நாம் எப்போதும் பாதுகாப்பது எமது பாரிய கடமையாக இருக்கிறது. நாம் பெற்ற இந்த சுதந்திரத்தின் முழு பயனையும் அடைய வேண்டுமானால் நாம் அனைவரும் இன, மத குல பேதமின்றி ஒரே சமூகமாக ஒரு நாட்டின் குடிமக்களாக வாழ்வதே முக்கியமாகும். எமது சிந்தனைகள், எமது ஆன்மீகம் என்பவை வளர்ச்சியடைய வேண்டும்.

»» தொடர்ச்சி 15ம் பக்கம் ««

# மரியன்னை ஆண்டில் மரியன்னையை எதிர்ப்பவர்களின் நிலை திண்டாட்டம்

* அடிப்படை வாத குழுக்களின் பின்னணியில் பல்தேச நிறுவனங்கள்.
* சபைகளின் பசப்பு மொழியில் ஏமாந்த கத்தோலிக்கர்கள் திரும்பவும் வருகின்றனர்.
* வைகாசி மாதம் மடு திருப்பயணத்திற்கு பெருந்திரளான மக்கள் ஒன்று கூடுவர்.
* சிறிய பங்கே பிரச்சினைக்கு பதிலாகும்.

மரியன்னையின் ஆண்டடை பிரகடனப்படுத்தியதன் ஊடாக விசுவாசிகளின் மத்தியில் புதியதொரு எழுச்சி ஏற்பட்டதைக் கண்டு அடிப்படைவாத சபைகள் அல்லது பைபிள்காரர் என்று அழைக்கப்படுவோர் கத்தோலிக்கர் போன்று முகமூடி அணிந்து மரியன்னையின் நாமத்தை இழிவுப்படுத்த முயற்சிக்கின்றனர். அதேவேளை திருவிவிலியத்தில் மரியன்னை எல்லா தலைமுறையும், என்னை பேறுடையாள் எனப் போற்றுமே என்று இறைவாக்கு உரைத்ததை மறந்தும், சிலுவையில் அடியில் நின்ற மரியன்னையை "இதோ உன் தாய்" என்று அன்பு சீடருக்கு அளிக்க அவரும் மரியன்னையை தம் வீட்டிற்கு அழைத்துச் சென்றார் என்பதை மறந்தும்,

»» தொடர்ச்சி 15ம் பக்கம் ««

## கொழும்பு உயர் மறைமாவட்ட புதிய நியமனங்கள்

**அருட்பணி. பியந்த சில்வா அடிகள்**
பதில் பங்குத்தந்தை - சேதவத்தை

**அருட்பணி. ஷிகான் இந்திக்க பெரேரா அடிகள்**
பதில் பங்குத்தந்தை - கொரலவல்ல

**அருட்பணி. லெஸ்லி பர்னாந்து அடிகள் – ஆன்மீக குரு**
புனித யூட் கல்லூரி - குரணை

**அருட்பணி. குளோட் நோனிஸ் அடிகள் – இயக்குனர்**
குடும்ப அப்போஸ்தலிக்கப் பணி

**அருட்பணி. ஜூலியன் பெற்றிக் பெரேரா அடிகள்**
கல்வி - வெளிநாடு

தகவல் அருட்தந்தை யூட் சமந்த அடிகளார்
செயலாளர் - கொழும்பு உயர் மறைமாவட்டம்

## பொது நிலையினருக்கான விசேட கருத்தமர்வு

கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதி மேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் வேண்டுகோளிற்கு அமைய விசுவாச உயிரூட்டல் பணியகத்தின் ஏற்பாட்டில் மேதகு ஆயர் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் தலைமையில்....

»» தொடர்ச்சி 15ம் பக்கம் ««

குறிப்பு : உங்கள் சார்பாக எத்தனை பேர் சமூகம் அளிப்பீர்கள் என அறியத் தரவும்.

தகவல் : அருட்தந்தை சிசில் ஜோய் அடிகள்
கொழும்பு உயர் மறைமாவட்ட விசுவாச உயிரூட்டல் பணியகம்.

அருட்தந்தை உதயதாஸ் அடிகள்
கொழும்பு உயர் மறைமாவட்ட விசுவாச உயிரூட்டல் பணியகம்.
தொ.பே. இலக்கங்கள்
0718563646, 0775720869

## தூய யோசேப்பின் பெயரை நற்கருணை மன்றாட்டில் இணைத்தல்

தூய யோசேப்பு கன்னிமரியாவின் துணைவர். இயேசுவின் வளர்ப்புத் தந்தை. உலகத் திருச்சபையின் பாதுகாவலர். மேலும் குடும்பங்களின் பாதுகாவலராகவும் இறைமக்களினால் போற்றப்படுகின்றார். இருப்பினும் அவருடைய பெயர் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்னதாக பயன்படுத்தப்பட்ட முதலாம் (உரோமை) நற்கருணை மன்றாட்டில் இடம்பெறவில்லை. இக்குறையை நிவர்த்தி செய்யவும், திருவழிபாட்டில் அவருக்குரிய பற்றையும், பக்தியையும் அதிகரிக்கும் நோக்குடன் இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதத்தின் பின், 1962ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் தூய யோசேப்பின் பெயரை உரோமை நற்கருணை மன்றாட்டில் இணைக்கும்படியாக திருத்தந்தை 23ம் அருளப்பர் கட்டளையிட்டார்.

»» தொடர்ச்சி 15ம் பக்கம் ««

தகவல் : அருட்பணி. இக்னேசியஸ் வருணகுலசிங்கம்
இயக்குனர்
தேசிய வழிபாடு மற்றும் கலாச்சாரம்

## பாடகர் குழாம் பயிற்சி (நீர்கொழும்பு பகுதி)

நீர்கொழும்பு பகுதியிலுள்ள சகல ஆலயங்களில் உள்ள பாடகர் குழாம் அங்கத்தினர்களுக்கு (இசை அமைப்பாளர் உட்பட) ஒரு பயிற்சி **மாசி 14 வெள்ளிக்கிழமை** போயா தினத்தன்று **காலை 8.45 மணி முதல் 12.30** மணி வரை **கடற்கரை தெரு புனித செபஸ்தியார் ஆலய மண்டபத்தில்** நடைபெறும். வயது 14 மேற்பட்டவர்கள் சமூகம் கொடுக்கலாம்.

ஒழுங்கு செய்பவர்
கொழும்பு மறைமாவட்ட திருவழிபாடு அத்தியட்சகர்.

## மரியன்னை ஆண்டின் மடுத் திருப்பதிக்கான திருப்பயணம்



வருகிற மே மாதம் 14ஆம் திகதியிலிருந்து 17ஆம் திகதி வரையிலான நாட்களில் விசேட மடுத்திருப்பயணம் கொழும்பு உயர் மறைமாவட்டத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்த திருப்பயணத்தின் போது பல விசேட தியான நிகழ்ச்சிகள், சிறப்புத் திருப்பலிகள் நடத்தப்பட்டு....

»» தொடர்ச்சி 15ம் பக்கம் ««

உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன (லூக்காஸ், 2:31)

## இறைபதம் அடைந்தார்

"பின்பு அரியணையில் வீற்றிருக்கும் அரசர் தம் வலப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து "என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள் உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப் பேறாக பெற்றுக்கொள்ளுங்கள்" (மத் : 25:34)

அருட்தந்தை சேம் குயின்டஸ் அடிகளாரின் தாயாரும் மற்றும் அருட்தந்தை எட்வட் ரெவர் புள்ளே, மறைந்த அருட்தந்தை பீட்டர் ரெவர்புள்ளே அடிகளார்களின் தாயாரும் இறைபதம் அடைந்தனர்.

ஞான ஒளி ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து இவர்களின் ஆன்மா இறைவனின் இளைப்பாற பிரார்த்திக்கின்றது.

## மருத்துவக் கல்வி மாணவர்களுக்கான நிதியுதவி

கடந்த காலங்களைப் போன்று இவ்வருடமும் மருத்துவ பீடத்தில் பயிலும் கத்தோலிக்க மாணவர்களும், மற்றும் பல் வைத்திய மாணவ பீடங்களிலும் பயிலும் கத்தோலிக்க இளம் மாணவர்களுக்கான நிதி உதவி வசதிகள் வழங்கப்படவுள்ளது. இந்த நிதி உதவி வசதிகளை பெறுவதற்கு ஆங்கில மொழியில் கீழ்காணும் முகவரிக்கு 31.01.2014ற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

1) பயிலும் பீடத்தின் பெயர், பெறுபேறு பிரதியும்
2) குடும்ப விபரங்கள் மற்றும் குடும்ப வருமானம் பற்றிய விபரங்கள்
3) பங்குத்தந்தையின் சிபாரிசு கடிதம்
4) பாடசாலை அதிபரின் சிபாரிசு கடிதம்

**முகவரி**

Dr. Maxie Fernando pulle - Coordinator

33, Police Park Avenue - Colombo - 05

T.P - 0112501217, 071 8433038

## மன்னார் தமிழ்ச் சங்கத்தின் பொங்கல் விழாவும் 'புதிய தளம்' சஞ்சிகை அறிமுகமும்



மன்னார் தமிழ்ச் சங்கத்தின் பொங்கல் விழா கடந்த ஜனவரி மாதம் 14 ஆம் திகதி மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அரும்பணி மையமான கலையருவியில் இடம்பெற்றது. அன்றைய தினம் அதிகாலை பொங்கல் பொங்கும் நிகழ்வு தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் மன்னார் அமுதனின் தலைமையில் இடம்பெற்றது. தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் த லை மை யி ல் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக பகுதி நேர விரிவுரையாளரும் பண்டிதருமான தமிழறிஞர் திரு. கடம்பேஸ்வரன் (யாழ்ப்பாணம்) அவர்கள் "தமிழில் பிற துறைகள்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். திரு. கடம்பேஸ்வரன் அவர்களை திருமதி சுஜான அப்துல் றஹ்மான் அவர்கள் அறிமுகம் செய்துவைத்தார்.

தொடர்ந்து "புதிய தளம்" என்ற பெயரில் வெளிவந்துள்ள சமூக, கலை, இலக்கிய, பண்பாட்டு இரு மாத இதழின் அறிமுகம் இடம்பெற்றது. இச்சஞ்சிகை பற்றிய அறிமுக உரையை இச்சஞ்சிகையின் ஆசிரியர் திரு. ந. இரவீந்திரன் (கொழும்பு) அவர்கள் வழங்கினார். இச்சஞ்சிகை பற்றிய மதிப்பீட்டுரையை மன்னார் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. எம். சிவானந்தன் வழங்கினார். தொடர்ந்து கருத்துப் பரிமாற்றங்களும் இடம்பெற்றன.

இதைத்தொடர்ந்து கவியரங்கம் இடம்பெற்றது. நாவலாசிரியர் எஸ். ஏ. உதயா அவர்களின் தலை -மையில் இடம்பெற்ற இக்கவியரங்கில் மன்னார் கவிஞர்களான மன்னார் அமுதன், நிசாந்தன், மயூறன், ஷிஹார் போன்றோர் கலந்துகொண்டனர். கிராமிய நடனம் போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. தமிழ்ச்சங்க உறுப்பினர் திரு. அமல்ராஜ் றெவல் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் அனைத்தும் நிறைவுபெற்றன.

## மகா கல்கமுவ அருளாளர் யோசேவ்வாஸ் ஆலய வருடாந்த திருவிழா





மகா கல்கமுவ அருளாளர் யோசேவ்வாஸ் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவானது கடந்த 14.01.2014 அன்று நடைபெற்றது. அன்றைய தினத்தில் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை மற்றும் குருநாகல் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி ஹெரல்ட் அன்டனி பெரேரா ஆண்டகை ஆகியோர், பங்குத்தந்தை அருட்பணி. நியூமன் முத்துத்தம்பி அ.ம.தி அடிகளாரால் வரவேற்கப்படுவதையும் புனரமைக்கப்பட்ட கண்ணாடி பேழையில் அருளாளர் யோசேவ்வாஸ் அடிகளாரின் திருச்சிலுவை ஸ்தாபிக்கப்பட்டுள்ளதையும் படங்களில் காணலாம்.



தேசிய பொதுநிலையினர் சங்கத்தின் 2014 வருடத்திற்கான முதலாவது கூட்டம் மேதகு ஆயர் நோபர்ட் அந்திராடி ஆண்டகையின் தலைமையில் பெல்கம் பிளேஸ் ஆயர் பேரவையின் மண்டபத்தில் நடைபெற்றது. அந்நிகழ்வில் பங்குபற்றிய குருக்களையும் அருட்சகோதரிகளையும் படத்தில் காணலாம்.



யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் முல்லைத்தீவு பிரதேசத்தில் குடிநீர் வசதி பெற்றுக்கொள்வதற்காக கிறிஸ்தவ தொழிலாளர் சங்கத்தினால் பண உதவி தேசிய கிறிஸ்தவ தொழிலாளர் சங்கத்தினால் வழங்கப்பட்டது. அருட்பணி. ஸ்டெனிஸ்லோஸ் மற்றும் கி.தொ.ச தலைவர்களையும் படத்தில் காணலாம்.

தகவல் :
தியோபோல்ட் சமரதுங்க

### சமாதான நீதவான்



கொட்டாஞ்சேனை, கொழும்பு -13 ஐச் சேர்ந்த ஜோசப் ஜெரோம் லெனின் பர்னாந்து கொழும்பு - 12 நீதிமன்ற நீதிவான் ஏ.எம். பீரிஸ் முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் நியு ரத்னாயக்க டெயலர்ஸின் உரிமையாளர் ஆவார். புனித அந்தோனியார் கல்லூரியின் பழைய மாணவரான இவர் புனித அந்தோனியார் இளைஞர் முன்னணியின் ஆலோசனை சபை தலைவராக இருப்பதோடு புனித லூசியாள் பேராலயத்தின் தமிழ் பெற்றோர் சங்கத்தின் தலைவராகவும் கடமையாற்றி வருகின்றார். இவர் கடந்த 35 வருடங்கள் சமூக சேவையில் ஈடுபட்டு வருகின்றார்.

### தவறுதலுக்கு வருந்துகின்றோம்



கடந்த இதழில் (தை 19 ஆம் திகதி) வெளிவந்த ஞான ஒளி பத்திரிகையில் திருப்பாலர் சபை ஸ்தாபகரின் படம் பிழையாக பிரசுரிக்கப்பட்டிருந்தது.

**திருப்பாலர் சபை ஸ்தாபர்**
**ஆயர் சாள்ஸ் டீ போபின் ஜான்சன்**
**ஆண்டகை ஆவார்**

## இரத்தினபுரி மறைமாவட்ட நிகழ்வுகள்



இரத்தினபுரி மறைமாவட்டத்தின் அத்-ஓய முத். யோசேவ்வாஸ் முனிவரின் ஆலயத்தில் வருடாந்த திருவிழா 2014.01.19 அன்று இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி கிளிட்டஸ் சந்திரசிறி பெரேரா ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது. அன்றைய தினம் அருட்பணி. அன்டன் மொறாயஸ் அடிகளார் தமிழ் மொழியில் மறையுரையாற்றியதுடன் அநேக தமிழ் மக்கள் இத்திருப்பலியில் கலந்து கொண்டு சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது. படத்தில் ஆயர் அவர்கள் முத். யோசேவ்வாஸ் முனிவரின் திருச்சுருபத்தால் ஆசீர்வதிப்பதையும், அவருடன் ஆயர் செயலர் அன்டன் மொறிஸ் அடிகளார், இரத்துபுரி ஆலயத்தின் பங்குதந்தை அருட்பணி. ரஞ்சன் மொறாயன் அடிகளாரையும் காணலாம்.



இரத்தினபுரி மறைமாவட்டத்தில் செடெக் நிறுவனத்தினால் 60 புலமைப்பரிசில்கள் மேதகு ஆயர் கிளிட்டஸ் சந்திரசிறி ஆண்டகையின் தலைமையில் ஏலியகொடை ஆலய மண்டபத்தில் வைத்து மாணவர்களுக்கு அளிக்கப்பட்டது. அந்நிகழ்வினை படத்தில் காணலாம்.

தகவல் :
தியோபோல்ட் சமரதுங்க

ஞான ஒளி
GNANA OLI

கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984,0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
02 மாசி மாதம், 2014 ஞாயிற்றுக்கிழமை.

## சுதந்திரம் என்பது நான் விரும்புவதையெல்லாம் செய்வதன்று. மாறாக நான் செய்யவேண்டியதைப் பொறுப்புடன் செய்வதாகும்.

"சுதந்திரம் இல்லாமல் ஒருவன் மகிழ்ச்சியாகவும் இருக்கமுடியாது. நல்லவனாகவும் இருக்கமுடியாது"

இரு பட்டங்கள் வானில் பறக்கின்றன. அவற்றின் நூல் நுனியை கீழிருந்து இரண்டு சிறுவர்கள் இயக்கிக் கொண்டிருக்கின்றார்கள். காற்று எனும் நண்பனின் துணையோடு பட்டங்கள் பறக்கின்றன. அதில் ஒருபட்டம் இவ்வாறு கூறுகிறது "காற்று எனும் நண்பன் நான் இன்னும் மேலே பறந்து வானத்தை தொட்டு விட உதவி செய்கிறான். ஆனால் கீழே இருப்பவனோ என்னைவிடாது தடுக்கின்றான். இவன் ஒரு நண்பனா? எனத் திட்டத் தொடங்கியது. மற்ற பட்டம் கூறியது அவன் கீழிருந்து எம்மை இயக்குவதால் தான் எம்மால் அழகாக பறக்க முடிகிறது என்று கூறியது. நான் சுதந்திரமாக பறக்க ஆசைப்படுகின்றேன் என்றது மற்ற பட்டம். சற்றுநேரத்தில் வேகமாக வீசிய காற்றில் சுதந்திரமாக பறக்க விரும்பிய பட்டத்தின் வால் காணாமல் போனது. இன்னும் சற்றுநேரத்தில் தன் உறுப்புக்களை எல்லாம் ஒவ்வொன்றாக இழந்து மடிந்தே போனது.

நாம் விரும்பும் சுதந்திரம் என்ன? என்னை யாரும் கட்டுப்படுத்தாத வாழ்க்கைதான் சுதந்திரம். எனக்குப் பிடித்ததை எனக்கு விருப்பமான நேரத்தில் செய்வதுதான் எனக்கு சுதந்திரம். ஆனால் உண்மையில் சுதந்திரம் என்பது நான் விரும்புவதையெல்லாம் செய்வதன்று. மாறாக நான் செய்யவேண்டியதைப் பொறுப்புடன் செய்வதாகும். ஆனால் நாம் எமது கடமைகளைப் பொறுப்புடன் செய்து சுதந்திரமாக வாழ்கின்றோமா? நாம் சுதந்திரமாக வாழ்வதற்கு பலவேளைகளில் எமது சூழ்நிலைகள் சமுதாயம் பெரியோர் மதக்கோட்பாடுகள் என்பவை பெரும் முட்டுக்கட்டைகளாகத் தோன்றுகின்றன. சிலர் நன்மைக் கருதி அமைதி காக்கின்றனர். பலர் வழிமாறி வாழ்க்கைத் தடுமாறி மாண்டு அழிகின்றனர். உண்மைச் சுதந்திரம் எதுவென நாம் நன்கு அறிந்துக்கொண்டால் வாழ்க்கையில் எந்தவொரு குழப்பமும் ஏற்பட வாய்ப்பிருக்காது.

சுதந்திரம் என நாம் பேசும்போது முதலில் நாம் மனதில் வைத்துக் கொள்ளவேண்டியது நமது ஆழ்மனச் சுதந்திரத்தைத்தான். நாம் எப்போது ஆழ்மனச் சுதந்திரத்தை அடைகின்றோம்? நேர்மையான பொறுப்புள்ள கடமைப்பண்புள்ள வாழ்க்கையை வாழும்போதே ஆகும். குடும்பத் தலைவனொருவன் குடி போதை என பல தீயப்பழக்கங்களுக்கு தன்னை அடிமைப்படுத்தும்போது தன் குடும்பத்தை வழிநடத்தும் சக்தியை இழந்து பொறுப்பற்ற வாழ்க்கையினால் தனது சுதந்திரத்தை இழந்துவிடுகின்றான். இதுபோன்றுதான் அனைத்து பொறுப்பு நிலையிலுள்ளவர்களும் தமக்கு கொடுக்கப்பட்ட பணியை நேர்மையாக உண்மையாக வாழத் தவறும்போது தமக்கு கிடைத்த சுதந்திரத்தை இழந்துவிடுகின்றனர். வாழ்க்கையை நாம் சற்று உற்றுநோக்கினால் மனிதர்களாக பிறந்த நம் ஒவ்வொருவரிடமும் சில குறைபாடுகள் இயலாமைகள் இருக்கத்தான் செய்யும். நாம் வாழும் சமுதாயத்தில் சுற்றுப்புறச் சூழல்கள் நம்மைச் சிலவரையறைக்குள் உட்படுத்துகின்றன. இவை அனைத்தையும் உணர்ந்து செயற்படவேண்டும். நமது சுயநல தேவைகளை மறந்து மற்றவர்களின் சுதந்திரத்தையும் மதித்து வாழவேண்டும். இதுவே உண்மையான சுதந்திர வாழ்விற்கு இலக்கணமாக அமையும். "ஒருவன் தான் பெற்ற சுதந்திரத்தை மற்றவர்களுக்கும் அளிக்க மறுத்தால் அவன் தீயவன்" எனஓர் அறிஞர் கூறுகிறார்.

எமது இலங்கைத் தாய் நாடு சுதந்திரமடைந்து 66 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. ஆனால் எமது சுதந்திரம் எங்கே? நாம் சுதந்திரமாக வாழ்கின்றோமா? எமது தாய் நாட்டின் சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்றோமா? அல்லது சுவாசிக்கத் தவறிவிட்டோமா? எமது கடமைகள் பொறுப்புக்களை நீதியோடும் உண்மையோடும் சரிவர நிறைவேற்றாது எமது சுதந்திரத்தை தொலைத்துவிட்டோமா? என சற்று சிந்தித்துப் பார்ப்போம். எமது சுதந்திரம் எமது கையில். எனவே நாம் தவறவிட்ட கடமைகள் பொறுப்புக்கள் எல்லாவற்றையும் ஒருகணம் சிந்தித்துப் பார்த்து நேர்மையோடும் உண்மையோடும் வாழ ஆசைப்படுவோம். சுதந்திரமாக வாழத்தொடங்குவோம் இன்று.

இறையாசீருடன்
ஆசிரியர்




# இயேசுவை கோவிலில் அர்ப்பணித்தல்

***என் பார்வையில் நீ விலையேறப் பெற்றவன் மதிப்பு மிக்கவன் (எசா 43:4).***

மோயீசனின் சட்டப்படி ஒரு தாய் தன் ஆண் குழந்தையை பெற்றெடுக்கும்போது ஏழு நாள் விலக்கு இருந்து எட்டாம் நாள் அக்குழந்தைக்கு விருத்தசேதனம், செய்ய வேண்டும். அதைத் தொடர்ந்து அவளின் தீட்டு முடியும் வரை 33 நாள்களும் தூயபொருள்களைத் தொடாமல் இருக்க வேண்டும். பெற்றெடுக்கும் குழந்தை பெண்ணாக இருந்தால் இரண்டு வாரம் விலக்கு இருப்பதுடன் பின்பு 66 நாள்கள் தீட்டு முடியும் வரை தூய்மையான எதையும் தொடாமல் இருக்க வேண்டும்.

காலக்கெடு முடிந்த பிறகு ஓராண்டு நிறைவுள்ள செம்மறி ஒன்றை எரிபலியாகவும், புறாக்குஞ்சு அல்லது காட்டுப்புறா ஒன்றை பாவம்போக்கும் பலியாகவும் குருவிடம் கொடுக்க வேண்டும்.

அவர் அதனை ஆண்டவரின் திருமுன் கொண்டு வந்து காணிக்கையாக்கி குழந்தை பெற்றெடுத்த பெண்ணின் இரத்தத் தீட்டை நீக்குவார். ஆட்டுக்குட்டி கொண்டுவர இயலாதவர்கள் ஓராண்டு காட்டும் புறாக்கள் அல்லது இரண்டு புறாக்குஞ்சுகளைக் கொண்டு வந்து ஒன்றை எரிபலியாகவும் மற்றதை பாவப்போக்கும் பலியாயும் ஒப்புக்கொடுப்பார் (லேவி 12:2-8).

மனிதரானாலும், விலங்குகளானாலும் தலை பேறானவை அனைத்தும் ஆண்டவருக்கே உரியது ஆயினும், மனிதரில் தலைபேறானவை-களை ஈடுகொடுத்து மீட்டுக்கொண்டது அக்கால வழக்கமாக இருந்தது. ஏன் இன்னும் கூட இது வழக்கமாக இருக்கிறது.

அதன் படி மோயீசனின் சட்டத்தை நிறைவேற்ற, இயேசுவைக் கோவிலில் அர்ப்பணிக்கத் தானும் தூய்மையாகும் பொருட்டு அன்னை மரியா ஆலயத்திற்கு சென்றார். எனவே இந்த விழாவை மரியாயின் தூய்மை சடங்கு விழா என்றும், மேலும் அன்னையும், ஆண்டவரும் சிமியோனையும், அன்னாவையும் சந்திக்கும் விழா, என கிரேக்கர்கள் இதனை அழைக்கின்றனர். இறைமகனின் ஆலய வருகை என அமெரிக்கர்கள் அழைக்கின்றனர். இவ்விழா தொடக்க திருச்சபையில் எருசலேமில் கொண்டாடப்பட்டது. எஜேரியா என்ற துறவி 400ஆம் ஆண்டு எருசலேம் சென்றபோது இந்த விழா மிகப் பக்தியுடனும் உற்சாகத்துடனும், கொண்டாடப்பட்டதாக கூறியுள்ளார்.

கொன்ஸ்தாந்திநோபிள் நகரில் பிளேக்நோய் வேகமாகப் பரவி மக்களைக் கொன்றழித்த போது ஆண்டவரின் அபரி-தமான அன்பினால் அந்நோய் முற்றிலுமாக நீங்கியது. இதற்கு நன்றி செலுத்தும் முகமாக பேரரசன் முதலாம் ஜஸ்டின் அடிகளாரால் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இவ்விழாவைக் அறிமுகப்படுத்தினார். இப்பொழுதும் இப்பழக்கம் நம்மிடையே இருக்கின்றது பிறந்த குழந்தை உடல் நலமில்லாமல் இருந்தால் அக்குழந்தை இறைபராமரிப்பில் எந்நாளும் வளர வேண்டும். என பெற்றோர் அக்குழந்தையை ஆலயத்திற்கு எடுத்து வருகின்றனர்.

அக்குழந்தையை இறைவனின் பிள்ளை-யாக ஒப்புக்கொடுக்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் குழந்தையுடன் அவ்வாலயத்திற்கு வந்து குறிப்பிட்ட தொகையை காணிக்கையாக அதாவது விலையாகக் கொடுத்து குழந்தையை மீண்டும் வாங்கிச் செல்கிறார்கள். ஆகவே இயேசுவின் காணிக்கை விழாவைக் கொண்டு நாம் நம்மை முழுவதுமாக இறைவனுக்கு அர்ப்பணிப்போம். "நீங்களோ உங்கள் உறுப்புகளைத் தீவினையின் கருவிகளாகப் பாவத்திற்கு ஒப்புவிக்காதீர்கள் உங்களை கடவுளிடம் ஒப்படையுங்கள். அவருக்கு ஏற்புடையதைச் செய்வதற்குரிய கருவிகளாய் உங்கள் உறுப்புக்களை அவரிடமே ஒப்படையுங்கள். இது தூய வாழ்வுக்கு வழிவகுக்கும்" என தூய பவுல் விளக்குகிறார். நம் வாழ்வில் ஆண்டவருக்காகவும், பிறருக்காகவும் எவையேனும் நாம் விட்டு விடும் போது நமக்கு ஆசி கிடைக்கின்றது.

பாவத்தை விட்டொழிக்கும் போது பரிசுத்தம் பற்றிக் கொள்கிறது. கோபத்தை விட்டொழிக்கும் போது அமைதியும். சோம்பேறித் தனத்தை விட்டொழிக்கும்போது உழைக்கும்போது உணவும் கிடைக்கிறது. உலக சிற்றின்பத்தை விட்டொழிக்கும்போது இறை பிரசன்னம் கிடைக்கிறது.

நமது உடலையே காணிக்கையாக்கும் போதும், செபிக்கும்போதும், இறைவிருப்பத்தை அறியவும், தூய வாழ்வு வாழ தேவையான அருள் நமக்கு கிடைக்கிறது. ஆகவே இறைவனிடம் நம்மை காணிக்கையாக்கும்போது நாம் எவ்வளவோ அளப்பரிய நன்மைகளைப் பெற்றுக்கொள்கிறோம் என்பதை உணர்ந்தவர்களாக எமது சொல் செயல் சிந்தனை ஏன் நம்மையே கடவுளுக்கு காணிக்கையாக்குவோம்.

**ஆக்கம் : பேர்னத்**

# உண்மை உறைக்கும்

கமிலஸ்



# இளைஞர்களின் வழிகாட்டி தோபியா



இளையோர் பக்கம்

**அங்கம் - 49**

## நல் உறவுக்கு ஓர் உதாரணம்

அறிவுரைக் கேட்ட தோபியா தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக உறுதி கூறுகிறார். இருப்பினும், தன்னுடைய இயலாமையையும் தன் உரையாடல்களில் வெளிப்படுத்துகிறார். அதாவது, பணத்தைத் திருப்பிப் பெறுவதற்கோ, மேதியா செல்வதற்கோ தனக்கு வழி தெரியாது என்கிறார் (5:1-2).

தன் மகனின் ஆதங்கத்தை அறிந்துகொண்ட தந்தையும் கேள்விகளுக்கு சரியான பதில்கள் தந்து வழிகாட்டுகின்றார். தந்தை என்பவர் மகன் (மகள்) கேட்கும் கேள்விகளை தேவையற்றதாகப் பார்க்கக்கூடாது, மாறாக அவைகளை விளக்கி அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் எடுத்துக்கூறக் கூடிய அளவுக்கு பொறுமையும் அறிவும் தேவை. இவ்வழிமுறை எல்லாப் பெற்றோருக்கும் பொருந்தும். பிள்ளைகள் தாங்கள் கேட்கும் கேள்விகளுக்கு சரியான விளக்கமோ, பதிலோ கிடைக்கவில்லையேல், சரியான பதில் தேடும் முயற்சியில் தவறான வழிமுறைகளைக் கற்றுக்கொள்ள அதிக வாய்ப்புகள் உண்டு.

நம் கதையின் நாயகனான தோபியா தந்தையிடமிருந்து போதுமான விளக்கத்தைப் பெறுகிறார். தோபித்து தன் மகனின் இரு கேள்விகளுக்கும் தகுந்த விதத்தில் பதில் தருகிறார். முதல் பதிலில், கபேலிடமிருந்து பணத்தைத் திருப்பிப் பெற ஆதாரம் இருப்பதாகவும் (5:3), அது கையொப்பமிட்ட ஆவணம் என்றும் கூறுகிறார். கபேலுடன் கையொப்பமிட்ட ஆவணத்தின் ஒரு பகுதி தன்னிடம் இருப்பதாகவும், மற்றாரு பகுதி கபேலிடம் இருப்பதாகவும் கூறி, தன் மகனுக்கு நம்பிக்கை கொடுக்கிறார். நல்ல பெற்றோர் அவநம்பிக்கைச் சூழலில் பிள்ளைகளுக்கு நம்பிக்கைக்குரிய வார்த்தைகளைக் கூறி உறுதி தர வேண்டும்.

அந்திரேயா கிலிப்போர்ட் போஸ்டன் 'The Secrets of Successfull Parenting" என்ற நூலில், பெற்றேரின் முதல் கடமையாக ஒன்றைக் குறிப்பிடுகின்றார். அதாவது, வளரும் குழந்தைகள் முட்டி மோதி புதியவற்றைக் கற்றுக்கொள்கின்றனர். காலம் செல்லச் செல்ல ஒன்றைப் பற்றிய தெளிவையும் பெற்று உதவி பெறுகின்றனர். பிள்ளைகளுக்கு சில எதிர்பார்ப்புகள் உண்டு, பெற்றோருக்கும் அதேபோன்று இருப்பதுண்டு. பெற்றோரின் எதிர்பார்ப்புக்கு ஏற்பப் பிள்ளைகள் நடக்காதபோதும், பிள்ளைகள் தங்களின் எதிர்பார்ப்பை பெற்றோர் நிறைவேற்றாதபோதும் மோதல்கள் என்பவை இயல்பாகத் தோன்றும். இம்மோதல்களைத் தவிர்க்க வேண்டுமென்றால், பெற்றோருக்கு பொறுமையும், மோதல்கள் எழும் பிரச்சினைகள் பற்றிய அறிவும் தேவை. அப்படியே இல்லையென்றாலும் அதனை வழிமுறைப்படுத்துவதற்கான பக்குவம் தேவை, பிறரின் உதவியை நாடி பிள்ளைகளை நல்வழிப்படுத்தும் மனத்தாழ்ச்சி தேவை. முரண்டுபிடிக்கும் பெற்றோர், பிள்ளைகளின் எதிர்காலத்தை நாசமாக்குகின்றனர்.

தோபித்துவுக்கும் - மகன் தோபியாவுக்கும் இங்கே சில எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. தந்தையின் எதிர்பார்ப்பு தன் மகன் கபேலிடமிருந்து பணத்தைப் பெற்றுவர வேண்டும் என்பதாகும். தோபியா, தந்தையின் எதிர்பார்ப்பையும், அவரின் இயலாமையையும் நன்கு அறிந்துகொண்டு தானே முன்வருகின்றார். தோபியா, ஒரு நல்ல, பக்குவமான இளைஞராய் வளர்ந்திருக்கின்றார் என்பதற்கு இதுதான் அடையாளம். "குறிப்பறிந்து" செயல்படும் பிள்ளைகள் பெற்றோரின் ஆயுளைக் கூட்டுகின்றனர். அவர்களுக்கு மகிழ்ச்சியையும் வழங்குகின்றனர். மேலும் பெற்றோருடன் கொண்டுள்ள உறவில் உறுதி பெறுகின்றனர்.

குறிப்பறிந்து செயல்படும் மகனின் ஆதங்கத்தை புரிந்துகொண்ட தந்தை தோபித்து, தன்னுடைய இரண்டாவது பதிலில் அவனுக்கு நல்வழி காட்டுகின்றார். வழி தெரியாதே என்று தன் மகன் பின்வாங்கிவிடக்கூடாது என்பதற்காக, "இப்பொழுது உன்னோடு செல்வதற்கு நம்பிக்கை வாய்ந்த ஒருவரை நீயே தேடிப்பார். நீ திரும்பும் வரைக்குமுள்ள கூலியை அவருக்குக் கொடுப்போம்" (5:3) என்று கூறி தன் மகனே நல்ல துணையாளரைத் தேர்ந்தெடுக்கத் தூண்டுகிறார்.

தந்தை பலமுறை மேதியாவுக்குச் சென்றவர். அவருக்குப் பலரையும் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் அவர்களைப் பற்றி தன் மகனிடம் கூறவில்லை. ஒருவேளை தன்னுடைய அனுபவ அடிப்படையில் நல்ல வழிகாட்டிகள் கிடைக்காமல் போயிருந்திருக்கலாம் அல்லது தனக்கு வழிகாட்டிய அல்லது துணைக்கு வந்தவர்கள் இறந்து போயிருக்கலாம். அல்லது தன் மகனே தேடி கண்டுபிடிக்கட்டும், அவன் நல்ல வழிகாட்டியைத் தேர்ந்தெடுப்பான் என்று மகன்மீது கொண்ட ஆழமான நம்பிக்கையும் காரணமாக இருக்கலாம்.

தந்தையின் ஆதங்கத்தை மகனும், மகனின் ஆதங்கத்தை தந்தையும் புரிந்துகொண்டு செயல்படுகின்றனர். தந்தை தோபித்துவுக்கு, தன் மகன் மீது ஆழ்ந்த நம்பிக்கை உண்டு. கடவுள் வழியைப் பின்பற்றி, தன் அறிவுரை கேட்டு நடக்கும் மகன் நல்ல வழிகாட்டியைத் தேர்ந்தெடுக்கட்டும் என்ற சுதந்திரத்தையும் வழங்குகின்றார்.

## புதிய உறவுக்காரர் – அவர் கடவுளின் தூதுவர்

தந்தை தனக்கு கொடுத்த சுதந்திரத்தையும், தன்மீது கொண்ட நம்பிக்கையையும் வீணாக்கவில்லை. வீட்டைவிட்டு வெளியில் சென்ற தோபியா தன்முன் நின்ற வானதூதரைக் கண்டார் (5:4). "ஆண்டவரே குணம் தருகிறார்" என்ற பொருள் கொண்ட "இரபேல்" என்ற பெயர் பெற்றவர் அவர்.

நல்ல மனிதர்களுக்கு கடவுள் எப்பொழுதும் துணை நிற்கிறார். அவர்களுக்கு வழிகாட்டும் விதமாக தன் தூதர்களை அனுப்பிக் கொண்டுதான் இருக்கின்றார். கதையை எழுதிய ஆசிரியருக்கும், அதை வாசிக்கும் நமக்கும்தான் அவர் கடவுளின் வானதூதர் என்று தெரியும். தோபித்துவுக்கோ அல்லது அவர் மகன் தோபியாவுக்கோ அவர் யார் என முழுமையாகத் தெரியாது.

வாசலில் கண்ட மனிதர் ஒரு இளைஞராகத் தோற்றம் தருகின்றார் (5:5). தன்னை தோபித்துவின் உறுப்பினராகவும், வேலை தேடிக் கொண்டிருப்பதாகவும் (5:5), மேதியாவுக்குச் செல்ல வழி தெரிந்தவராகவும், அங்கு பலமுறை தான் சென்றுள்ளதாகவும் (5:6), இராகிலில் வாழும் கபேலின் இல்லம் சென்று தங்கியுள்ளதாகவும் கூறுகின்றார். இத்துடன் இணைந்த மற்றொரு நல்ல செய்தியையும் இரபேல் கூறுகின்றார். அது "எக்பக்தனா" வைப் பற்றிய குறிப்பாகும். "எக்பக்தனா" என்பது தன் உறவினர் இரகுவேல் வாழும் இடம். அவருக்கு அழகிய மகள் "சாரா" என்பவள் இருந்தாள். இவளுக்கு ஏழுமுறை திருமணம் நடைபெற்றதையும், எழுவரையும் அவளிடமிருந்த பேய் கொன்றது என்றும் தோபித்து கேள்விபட்டுள்ளார். இந்த உண்மையை, தோபியாவும் இரபேலும் எக்பத்னாவை நெருங்கும்போது தங்களின் உரையாடலில் வெளிப்படுத்துவதைக் காணலாம் (6:15).

இளைஞராகத் தோற்றம் தந்த வானதூ-தரின் பதில் மொழியைக் கேட்ட தோபியாவுக்கு மிக்க மகிழ்ச்சி. தனக்கு வழித்துணையாக வர தகுதியுடைய மனிதரைக் கண்டு கொண்ட நிறைவு. எனவே, "இளைஞரே, நான் சென்று என் தந்தையிடம் சொல்லிவிட்டுத் திரும்பும்வரை எனக்காகக் காத்திரும். நீர் என்னுடன் வரவேண்டும். உமக்குரிய சம்பளத்தைக் கொடுப்பேன்" (5:7) என்று கூறுகின்றார். தோபியாவின் வார்த்தைகளில் மூன்று செய்திகள் வெளிப்படுத்தப்படுகின்றன. ஒன்று, தன் தந்தையிடம் உறுதி செய்வதற்கான அனுமதி. இரண்டு, இனிமேல் தான் யாரையும் தேடப்போவதில்லை. இரபேலே தனக்குத் துணையாக வரவேண்டும். மூன்று, வேலை தேடும் இளைஞருக்குரிய கூலியைக் கொடுப்பதற்கான ஒப்புதல்.

தோபியா தந்தையின் ஒப்புதலுக்காக வீட்டிற்கு வந்து, "நம் உறவின் முறையினராகிய இஸ்ரயேல் மக்களுள் ஒருவரைக் கண்டு கொண்டேன்" என்கிறார் (5:9). தந்தையும் அவ்வுறவுக்காரர் நம்பிக்கைக்கு உரியவர்தானா என்று அறிய தன்னிடம் அழைத்து வரும்படி மகனிடம் கூறுகிறார் (5:9). தன் மகனின் முடிவை மனமுவந்து ஏற்றுக்கொள்கிறார். இருப்பினும், அம்முடிவை சரியானதா என்று அறியவும் விரும்புகின்றார். பிள்ளைகள்மேல் அக்கறையும், அவர்களின் எதிர்காலத்தை உருவாக்குவதில் முயற்சியும் மேற்கொள்ளும் நல்ல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் நல்ல முடிவுகளை எதிர்ப்பதில்லை. மாறாக அதை உறுதிசெய்ய பல வழிகளில் உதவி செய்கின்றனர்.

J. மவுருஸ் எழுதிய 'Just a Moment Please' என்ற நூலில், பெற்றோருக்கான பத்துக் கட்டளைகளை எடுத்தியம்புகின்றார். நல்ல பெற்றோருக்கு அவை தேவை என்பதால், அதன் பொருளை சற்று மாற்றி நம்முடைய வாழ்வுச் சூழலுக்கு ஏற்ப இங்கு தர விரும்புகின்றேன்.

1. உங்கள் பிள்ளைகளுக்கு நண்பராகுங்கள். அவர்கள் உங்கள்மீது நம்பிக்கை பெறக்கூடிய விதத்தில் அவ்வுறவு அமைந்திருக்கட்டும்.
2. பெற்றோர்களாகிய நீங்கள், உங்கள் வாழ்க்கை முன்மாதிரிகளால் உங்கள் பிள்ளைகளுக்கு நேர்மையான வழியைக் கற்றுக்கொடுங்கள்.
3. உங்கள் பிள்ளைகள் ஒரு நாள் முழுவதும் எங்கிருக்கிறார்கள், என்ன செய்கிறார்கள், யாரோடெல்லாம் உறவுகொண்டிருக்கிறார்கள், என்ன என்பதைப் பற்றிய தகவல்களை அறிய முயற்சியுங்கள்.
4. உங்கள் பிள்ளைகள் தவறிழைத்துவிட்டால், எங்கே தவறு என்று சுட்டிக்காட்டுங்கள். அவ்வாறு அவற்றை திருத்துகையில் கடினமாக நடந்துகொள்ளாது, கனிவுடன் நடந்துகொள்ளுங்கள்.
5. உங்கள் பிள்ளைகள் குடும்பத்தின் உறுப்பினர் என்ற உணர்வையும், அவர்கள் இல்லையேல் குடும்பம் என்பது பொருளற்றது என்ற உண்மையையும் அறியும் விதத்தில் உதவிடுங்கள்.
6. தந்தை மகன் உறவில், தன் மகன் உடல் வளர்ச்சியில் சந்திக்கும் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொள்ளக்கூடியப் பக்குவத்தைக் கற்றுத் தர வேண்டும். அதுபோல் சமுதாயப் பொறுப்புள்ள மகனாக வளர சமுதாயம் சார்ந்த சிக்கல்களையும், அதை எதிர்கொள்ளக்கூடிய வழிமுறைகளையும் சுட்டிக்காட்டுங்கள்.
7. அதேபோல் தாய் - மகள் உறவில், தாயும் தன் மகளின் பருவ மாற்றத்தால் சந்திக்கும் சிக்கல்களையும், வாழ்வைப் பற்றிய அடிப்படையான உண்மைகளை அறிந்துகொள்ளவும் உதவிட வேண்டும்.
8. உங்கள் பிள்ளைகளின் நண்பர்களுக்கென உங்கள் இல்லத்தைத் திறந்து வைத்திருங்கள். தங்கள் நண்பர்களை உங்கள் இல்லம் அழைத்து வரும்போது, அவர்களைப் பற்றி நீங்களே அறிய முடியும், அவர்களுக்குரிய சிக்கல்கள் என்ன என்பதையும் தெரிந்து உங்கள் பிள்ளைகளை நல்வழிப்படுத்த முடியும்.
9. கடவுள் சார்ந்த, மதம் சார்ந்தவற்றில் ஈடுபாடு காட்டும் விதத்தில் சிறுபிள்ளை பருவத்திலிருந்தே இறைவாக்கு வாசிப்பு, குடும்ப செபம், ஆலயப் பணிகளில் ஈடுபடுதல் போன்றவற்றில் ஊக்கப்படுத்துங்கள்.
10. குடும்பம் மற்றும் சமயப் பற்றும் கொண்டு வளர்வதோடு, நம் நாட்டின்மீது பற்றுகொண்ட பிள்ளைகளாக வளர உதவிடுங்கள். குறைகளும், முரண்பாடுகளும், ஏற்றத் தாழ்வுகளும், வறுமையும் நிறைந்தி ருந்தாலும். பயிற்சி எடுக்கும் ஒவ்வொரு தனிமனிதனும் இந்தச் சுதந்திர இலங்கையில் வளர முடியும். தன் வாழ்க்கையை மாற்றிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை ஊட்டுங்கள்.

ஒவ்வொரு பெற்றோரும் இங்கு சுட்டிக்காட்டப்படும் நல்ல வழிகளைப் பின்பற்றினால் தங்கள் பிள்ளைகளை உலகம் உயர்வாய்ப் பார்க்கும் உத்தமர்களாக மாற்ற முடியும்.

தோபித்து தன் மகன் "ஒட்டுமொத்த உருவாக்கத்தை" உள்வாங்கி வளரக்கூடிய விதத்தில் உதவுகிறார். எனவேதான் புதிய நண்பரைத் தானும் அறிய வேண்டுமென்ற நோக்கோடு, "இரபேலை" தன்னிடம் அழைத்துவரத் தூண்டுகிறார் (5:10)

தன்னித்து வரவழைக்கப்பட்ட இளைஞர் தன்னை "அசரியா" என்று அறிமுகப்படுத்திக் கொள்கிறார். இப்பெயர் தானியேல் நூலில் காணப்படுகின்றது. பாபிலோனிய மன்னன் நபுகத்னேசர் நிறுவிய பொற்சிலையை வணங்க மறுத்ததற்காக அனனியா, மிசாவேல், எசரியா என்ற மூன்று இளைஞர்களும் நெருப்புச் சூளையில் எறியப்பட்டார்கள் (தானி 3:23). தானியேல் நூலின் கிரேக்க மூல மொழி பெயர்ப்பின் தொடக்கத்தில் இம்மூன்று இளைஞர்களும் சத்ராக்கு, மேசாக்கு, அபேத்நேகோ (தானி (இ) 1:1) என்று அழைக்கப்படுகின்றனர்.

இரபேல் பல கேள்விகள் கேட்ட தோபித்துவிடம் "குலத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள தேவை என்ன? நான் உம் உறவினர்களுள் ஒருவரான பெரிய அனனியாசின் மகன் அசரியா" என்று பதில் கூறுகிறார் (5:12-13)

பதில்மொழியைக் கேட்ட தோபித்து அசரியா தன் உறவினர்களுள் ஒருவர் என்றும், சிறந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும், தன்னுடன் எருசலேமில் சென்று வழிபாடு செய்தவர்களின் வழிமரபில் வந்தவர் என்றும், நல்ல குடும்பத்திலிருந்து வந்தவர் என்றும் ஒப்புதல் வழங்குகின்றார் (5:14). தன் மகன் நல்ல நண்பரை, நல்வழிகாட்டியைத் தேர்ந்தெடுத்து உள்ளார் என்று மகிழ்ச்சியுறுகிறார்.

சம்பளத்தைப் பற்றிய ஒப்புதலுக்குப் பிறகு அசரியாவை தோபியாவின் "சகோதரன்" என்றும் அழைக்கின்றார் (5:12). தோபித்து தன் மகன் தோபியாவைப் பார்த்து "மகனே, பயணத்திற்கு ஏற்பாடு செய். உன் சகோதரத்துடன் புறப்படு.

தொடர்ச்சி 15ம் பக்கம்




# "சுதந்திரமும், மதிக்கப்பட வேண்டிய மனித மாண்பும்"

19ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த பிரேஞ்சு தத்துவ அறிஞர் ரூனோ என்பவர் சுதந்திர மனிதனைக் குறித்து இவ்வாறு கூறுகின்றார். "சுதந்திரம் என்பது பிறப்புரிமை" "சுதந்திரமாகப் பிறந்த மனிதன் எங்கு நோக்கினும் அடிமைச் சங்கிலியில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறான்" என்றார். அவருடைய வார்த்தைகள் இன்றைய மனித வாழ்வின் எதார்த்த நிலையினை எடுத்தியம்புவதாக இருக்கிறது. சுதந்திரம் அல்லது விடுதலை வாழ்வு என்பது மனித இனம் கொண்டிருக்கும், மாபெரும் சிறப்புக்களில் ஒன்று. இவ்வாறாக விடுதலை அனைவருடைய வாழ்விலும் அடிப்படை அம்சமாக இருக்கின்றது.

மாசி மாதம் 4ஆம் திகதி இலங்கைத் தாய்திருநாட்டின் சுதந்திர தினத்தை கொண்டாடி மகிழ்கின்றோம். ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் பல்லாண்டு காலமாக இருந்த நம் தாய்திருநாடு, 1948ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது யாம் அறிந்த விடயமே. இந்துமா சமுத்திரத்திலே "இந்து சமுத்திரத்தின் முத்து" என அழைக்கப்படும் நம் தாய்திருநாடு பல்லின, பல்சமய, பல்மொழி மக்கள் வளத்தையும், நிலம், கடல், சுற்றுச்சூழல் வளங்களையும் கொண்ட ஒரு அழகிய சிறு தீவாகும். இலங்கை சுதந்திரம் பெற்று 66 ஆண்டுகளை கடந்த நிலையில் மனிதரின் மாண்பு இன்றளவும் மதிக்கப்பட்டு வருகின்றதா என்றால் அது ஆய்வுக்குரிய விடயமாகும். இலங்கை மக்களின் வாழ்வியல் நிலைகளும், மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் நிகழ்வுகளும், மக்களின் வாழ்வின் போக்குகளை மாற்றியிருப்பதும் இலங்கையில் நடந்த பல்வேறு முக்கிய நிகழ்வுகள் கோடிட்டு காட்டுகின்றன என்றாலும் "தேசிய மக்கள்" என்ற நிலையை கடந்து மனித மாண்பு சிதைக்கப்பட்டுள்ள நிலையில், சுதந்திரத்தை மனிதனுக்கு அருளிய இறைவனின் துணையால் எம் நாடு இன்றும் வழிநடத்தப் பெறுவது யாம் பெற்ற பாக்கியமே.

"பாதுகாக்கப்பட வேண்டியவன் மனிதன் புதுப்பிக்கப்பட வேண்டியது மானிட சமுதாயம்" என்று மனித உரிமை பற்றியும், மனித மாண்பு பற்றியும் இரண்டாம் வத்திகான் சங்கம் எமக்கு எடுத்தியம்புகிறது. மனிதரை மையப்படுத்தி குவிந்த மனித வாழ்வின் சூழல் பல இன்னல்களை எதிர்கொண்டு ஓர் பல்சக்கர இயந்திரம் போல இயங்கிக் கொண்டுள்ளது. படைப்பனைத்தையும் உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள் என்று இறைவன் மனிதனுக்கு சுதந்திரத்தை அருளினார். இச்சுதந்திரத்தை தவறாக பயன்படுத்தியதன் வழியாக மானிட வாழ்வு சிதைக்கப்பட்டது என்றாலும் மனிதன் இறைசாயலாகவும், பாவனையாகவும் படைக்கப்பட்டுள்ளதால் அவன் சுதந்திரத்தை இழந்தானேயொழிய மனித மாண்பை இழக்கவில்லை. காரணம் மனித மாண்பு இறைவனால் அருளப்பட்டுள்ளது. இத்தகைய மனித மாண்பு எம் நாட்டில் மதிக்கப்படுகின்றதா? பெரும்பான்மையினர், சிறுபான்மையினரை அடக்கி ஆழ்வதும், மொழியினால் மக்கள் இனமாக மாற்றப்பட்டுள்ளதும், 30 ஆண்டுகால போரில் இறைவனின் உயிர்கள் அழிக்கப்பட்டதும் என்றெல்லாம் மனித மாண்பு சிதைக்கப்படுவதை நாம் இன்றளவும் எம் கண்களால் கண்டு கொண்டே இருக்கின்றோம். இறைசாயலாக படைக்கப்பட்ட மனிதன் இவ்விறைத் தன்மையை தன்னிடம் கொண்டுள்ளான். சுதந்திரமாகவும், அறிவார்ந்த விதமாகவும் வாழும் உரிமையை கொண்டுள்ளான். இச்சுதந்திரத்துடனான மனித மாண்பு என்றும் நிலைபெற இயேசு எமக்கு வழிகாட்டியுள்ளார். "ஆகையால் பிறர் உங்களுக்கு செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத் 7:12). எனவே இந்த நியதி நம் எல்லோருக்கும் பொருந்தும். இத்தகைய நிலையில் செயற்படும் மனித சுதந்திரம் மனித மாண்பை சிதைக்காமல் காத்து சீரமைக்கும் ஒரு சமூகமாக உருவெடுக்கும் என்பதில் எவ்வித ஐயமில்லை.

மனித மாண்பு மதிக்கப்படாத ஒரு சமூகத்தில் சுதந்திரம் என்பது காற்றில் விட்ட பட்டம் போல அசைவாடிக் கொண்டே இருக்கும். இது புதுப்பிக்கப்பட வேண்டும். எல்லா மனிதரும், மனிதரோடு மாண்பினை பேணி தன்னை ஒன்றினைத்து ஒரு சமூகமாக வாழும் போது நாம் பெற்ற சுதந்திரம் எம் வாழ்விற்கு வழிகாட்டும் ஊன்றுகோலாக அமையும். இத்தகைய சூழ்நிலையை எம் நாட்டில் நாம் உருவாக்கிட வேண்டும். சுதந்திரம் பெற்றுவிட்டோம் என்ற நிலையில் மாத்திரம் இல்லாமல், சுதந்திரத்துடன் இணைந்த மனித மாண்பை பாதுகாக்கும் பொறுப்பையும் பெற்றுள்ளோம். இன்றளவும் மக்கள் அகதிகளாக, அனாதைகளாக, விதவைகளாக, கைவிடப்பட்டவர்களாக, ஏழைகளாக வாழ்வதை நாம் காண்கின்றோம். மக்களின் இயல்பு வாழ்வு பறிக்கப்பட்டு, மக்களின் சுதந்திரமும், கட்டுப்படுத்தப்பட்டு, மனித மாண்பை சீர்குலைக்கும் ஒரு பிளவுபட்ட சமுதாயமாக நம் நாடு இருப்பதை காண்கின்றோம்.

"நாம் இலங்கை நாட்டவர்கள்" என்று எம்மை அடையாளப்படுத்திக் கொள்ள விளையும் இத்தருணத்தில், சுதந்திரம் பெற்ற இலங்கையில் மனித மாண்பு பாதுகாக்கப்பட வேண்டுமாயின் சமூக, அரசியல் மாற்றங்களும், மக்களிடையே புரிந்துணர்வும், மனித மாண்பும் அதிலிருந்து எழும் மனித உரிமைகளும் நிறைவேற்றப்பட வேண்டும். இன்றைய இலங்கை மக்களின் வாழ்வு எரியும் தீபங்களாக சுடர்விட்டு எரிய வேண்டும். பல்சமய மக்களும் தாம் பெற்றுக் கொண்ட சுதந்திரத்தை விழிப்போடு பேண வேண்டும். இறை தூண்டல் பெற்ற மானிட சமூகத்தின் மாண்புகள் மதிக்கப்பட வேண்டும். இத்தகைய நிலையில் முரண்பாடுகளை களைந்து மக்களின் வாழ்வியல் நிலைகளில் பயனிக்கும் போது தாம் பெற்ற சுதந்திரம் எம் வாழ்விற்கு ஒரு தென்றலாக மாறி, எம் மாண்பைக் காக்-கும் கருவியாகமாறும். எனவே மனித மாண்பு பாதுகாக்கப்பட வேண்டும். மனிதசமூகம் மதிக்கப்பட வேண்டும். எம் தாய்த்திரு நாடும் உண்மையான சுதந்திர காற்றை சுவாசிக்க வேண்டும். இவை இடம் பெற எம் மனங்களில் மாற்றம் பெறவேண்டும்.




எனவே இலங்கையின் சுதந்திர தினவிழாவை கொண்டாடும் நாம், எம் சமூகத்திலே எமக்கிருக்கும் கடமைகளையும், பொறுப்புக்களையும் உணர்ந்து, மனித மாண்பை மதிக்கும் சுதந்திர மக்களாக வாழ முற்படுவோம்.

**உங்கள் அனைவருக்கும்**

**'சுதந்திர தின வாழ்த்துக்கள்'**

**இவண்,**
**பெ. டிலோய்ட்சன் பெர்னாண்டோ,**
**இறையியல் 4ம் ஆண்டு**

## அகதிகளின் குரல்

பத்தடி வீட்டுக்குள்
எத்தனை ஆண்டுகள் வாழ்ந்திருப்போம்
ஏந்திய கைகளுடன்
கால்கள் கட்டப்பட்டு
காலம் எல்லாம் வாழலாமா?
அரிசியில் சோறு தருகிறீர்
அரசியல் சுதந்திரம் எப்போ தருவீர்?
மனிதர் என்று எம்மை மதிக்கிறீர்கள்
சுதந்திரத்தை மட்டும் தர ஏன் மறுக்கிறீர்கள்
விருந்தினராக நாங்கள் அயல் நாட்டில்
வீழும் வரை வாழவா?
விடியல் எமக்கு வெறும் கானல் நீராய் ஆவதா?
எம்மவர் பண்பாடும் பழக்கமும் பாழ்பட்டு போகுதே
பாராய் முகமாய் - உலகம்
முகம் திரும்பச் செய்வதேன்
வந்து நீங்கள் ஒரு நாள்
வாழ்ந்து பாருங்கள் - அகதிகளாய்
நாளை எம் விடியலுக்காய்
நடுநிசியிலும் குரல் கொடுப்பீர்






## சுதந்திர தீபம் ஒளிரட்டும்

எரிமலை வெடிக்கட்டும் இதயம் துடிக்கட்டும்
சுதந்திர தாகம் பிறக்கட்டும்
சூழ்ச்சிகள் அழியட்டும் துன்மதி ஒழியட்டும்
சுதந்திரம் இன்றே விடியட்டுமே

மனிதராய் பிறந்தோம் மதியுடன் வளர்ந்தோம்
மதம் கொண்ட இன வெறிகொண்ட
மனிதன் அடக்கிட நினைப்பது சரிதானோ...
மண்புழுவென நாமும் மடிதல் முறைதானோ...

சுகம்பெற்ற வாழ்வினில் இன்பம் துய்த்திட
சுரத்தினை இழப்பதும் சரியோ?..
சிரத்தினை தாழ்த்தி சீருடல் குறுக்கி
சீர்கெட வாழ்வது தகுமோ?...

பிறப்பது ஒருமுறை இறப்பதும் ஒருமுறை
பசலையாய் வாழ்வதுவா நிறை
பறவையாய் பறந்து சுதந்திரக் காற்றை
பழகிடல் தானே முறை

வா... வா... தோழா வா... வா...

தீப்பந்தம் எடுத்து வீணே சுணங்கும்
உளத் திரியினை கொழுத்து...
சுதந்திர தீபம் ஒளிரட்டும் தீமைகள் எரியட்டும்
நாளையப் பொழுது நமதாய் விடியட்டும்

## விசுவாசத்தைக் காக்க விழிப்பாயிருங்கள்

அருட்பணி. பிலிப் I.V. Dei

### இயேசு, மரியா, புனிதர்கள், இவர்களின் திருச்சுரூபங்கள்

கத்தோலிக்கராகிய நாம், நமது விசுவாசத்தின் முன்னோடிகளான மரியாவுக்கும், புனிதர்களுக்கும் வணக்கமும் மரியாதையும் செலுத்துகிறோம். நாம் ஒருபோதும் இவர்களைக் கடவுள்கள் ஆக்கி இவர்க-ளுக்கு ஆராதனை செய்வதில்லை. இவர்களுக்கு நாம் செலுத்தும் வணக்கத்தையும், மரியாதையையும் பைபிள்காரர்கள் கடவுளுக்குச் செலுத்தும் வழிபாடு என்று தப்புக்கணக்குப் போடுகிறார்கள். அத்தோடு மரியாவையும், புனிதர்களையும் அடையாளப்படுத்தும் திருச்சுரூபங்களை அவர்கள் கடவுள்களின் சிலைகள் என்று மீண்டும் தப்புக்கணக்குப் போட்டுள்ளார்கள்.

கல், மண், மரம், உலோகம் போன்றவற்றால் கடவுளுக்கு அடையாள உருவங்கள் செய்வதைச் சிலைகள் என்றும், இவற்றால் மனிதரை நினைவுபடுத்த செய்யும் அடையாள உருவங்களைச் சின்னங்கள் (சுரூபங்கள்) என்றும் வேறுபடுத்திச் சொல்லுகிறோம். உலக வழக்கில் மக்கள் சமூகப் பெரியோரை அடையாளப்படுத்தும் உருவச் சின்னங்களைச் சிலைகள் என்று சொல்லுவதால், பைபிள்காரர் எமது புனிதர்களின் அடையாளச் சின்னங்களான சுரூபங்-களையும் சிலைகள் என்றே சொல்லுகிறார்கள். இவர்களின் கூற்று தவறானது.

ஆவிக்குரிய நிலையில் இருக்கும் வானகத் தந்தைக்கும், தூய ஆவியாருக்கும் கத்தோலிக்கர் ஒருபோதும் சுரூபங்கள் செய்து வழிபடுவதில்லை. இயேசு மனிதனாகப் பிறந்த ஒரே காரணத்தால் அவரை அடையாளப்படுத்த அவருக்குச் சுரூபங்கள் இருக்கின்றன. இயேசுவை அடையாளப்படுத்தம் சுரூபங்களை அல்ல, மாறாக அவை குறித்துக்காட்டும் கிறிஸ்துவையே நாம் வழிபடுகிறோம். அவ்வாறே மரியாவையும், புனிதர்களையும் அடையாளப்படுத்தும் அவர்களின் சுரூபங்கள் வழியாக நாம் அவர்களை ஒருபோதும் வழிபடுவதில்லை. இச்சுரூபங்கள் வழியாக நாம் அவர்களுக்கு வணக்கத்தையும், மரியாதையையும் செலுத்துகிறோம். கத்தோலிக்கராகிய நாம் சுரூபங்களைக் கடவுளாக்கி ஒருபோதும் வழிபடுவதில்லை என்பதைப் பைபிள்காரருக்குத் தெளிவுபடுத்துவது அவசியம்.

*தொடரும்....*

குடும்பம் அங்கம் 69

## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

*பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா*
*உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.*

# குடும்பத்தில் கணவன் மனைவி உறவு



குடும்பத்தில் கணவர் மனைவி இருவருக்கிடையிலும் ஏற்படும் உறவு மிகவும் முக்கியமானது. இது ஆழமாக இருந்தால் தான் பிள்ளைகளுடனும், இருவரது பெற்றோர் சகோதரர்களுடனும் இருக்கும் உறவும் வெற்றியளிக்கும். கணவன் அயல் வீட்டுக்குப் போவதைத் தனது மனைவி விரும்பவில்லை என்பதை அறிந்திருந்தும் கணவன் அதைப் பொருட்படுத்தவில்லை. தனது கணவன் அயல் வீட்டுக்குப் போவதைத் தடைசெய்ய மனைவி ஒரு உபாயத்தைத் தேடினாள். தனது கணவன் அடுத்த வீட்டுக்குச் சென்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தனது இளைய மகளுடன் சண்டை பிடித்து அவளை வேதனைப் படுத்தினாள். இளைய மகள் சத்தம் போட்டு அழுவதைக் கேட்டதும் கணவன் உடனே வீட்டுக்கு வந்துவிடுவார் என்பதை மனைவி அறிந்திருந்தார். இவ்வாறு அடிக்கடி தண்டனை பெறும்போது தாயைப்பற்றி எப்படிப்பட்ட உணர்வு இளைய மகளுக்கு ஏற்படும்? தாய்க்கும் மகளுக்கும் இடையிலான உறவு பெலவீனமடையக் காரணமாக இருந்தது என்ன? கணவன் மனைவிக்கிடையில் நல்ல உறவு இல்லாததே காரணம்.

உறவு என்பது இன்றைய நாளைவிட நாளைய நாளில் வளர்த்துக் கொள்ளக் கூடிய ஒன்றாகும். கற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றாகும். தனது மனைவி-யோடு உறவை முறித்துக் கொண்ட கணவன் தனது மனைவியை விலக்கிவிட்டு வேறொரு பெண்ணைத் திருமணம் முடித்தால் புதிதாக ஆரம்பத்திலிருந்து நல்ல உறவை ஏற்படுத்தப் பழகிக் கொள்ளலாம் என்று நினைத்தானாம். இது பிழையான கருத்தாகும். தற்போது இருக்கும் மனைவியுடன் நல்ல உறவை ஏற்படுத்தப் பழக வேண்டும்.

பொதுவாகக் குடும்பங்களில் கணவன் மனைவிக்கிடையில் உள்ள உறவு குறைந்தே காணப்படுகின்றது. இதனால் பிள்ளைகள் பாதிக்கப்-படுகிறார்கள். அவர்களது ஆளுமை வளர்ச்சியில் குறைபாடுகள் ஏற்படத்தொடங்குகின்றன. பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்யும் பெரிய சேவை என்ன தெரியுமா? பிள்ளைகள் காணக்கூடிய விதத்தில் கண-வனும் மனைவியும் ஒற்றுமையாக இருப்பதே இவர்கள் இருவருக்கும் இடையில் உறவு முறியும்போது பிள்ளைகளின் உடல் ஆரோக்கிம், மன ஆரோக்கியம் கல்வியில் கிரகிக்கும் ஆற்றல், ஏனைய பிள்ளைகளுடன் ஏற்படும் உறவு அனைத்திலும் குறைபாடுகள் உள்ளதாகவே காணப்படும். பிள்ளைகளில் குறை-பாடுகள் ஏற்பட்டால் அது சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். இதை மனதிலே கொண்டு கணவனும் மனைவியும் செயற்பட வேண்டும்.

சிந்திப்போம்! செயற்படுவோம்!!

தொடரும்...

# பெற்றோரே....

## குழந்தைகளைக் கவனியுங்கள்!



இப்போதிருக்கும் குழந்தைகள் பாடசாலை விட்டால் வீடு, வீடு விட்டால் பாடசாலை என்று வாழ்கின்றனர். விடுமுறை நாட்களில் கம்பியூட்டர் முன்பும், டிவி முன்பும் தவம் கிடக்கின்றனர். தெருவில் இறங்கி விளையாடிய காலம் போய், கம்பியூட்டர் கேம்ஸ் விளையாடி, இளவயதிலேயே பார்வை குறை-பாடு அடைதல், அதிகப்படியான உடல் எடை என அல்லல்படுகின்றனர்.

பெற்றோரும் மனம் வெதும்பி, என்ன செய்வது என தெரியாமல் விழிக்கின்றனர். பெற்றோர் குழந்தைகளுக்கு துணை நின்றால் இதிலிருந்து மீள முடியும். இதற்குப் பெற்றோர் செய்யவேண்டியது.

குழந்தைகளுக்கு முன்மாதிரியாக இருந்து, ஊக்குவிக்க வேண்டும்.

கவலைக்கும், உடல் மனச்சோர்வுக்கும் தீர்வு, உடற்பயிற்சிதான் என்பதை எடுத்துரைக்க வேண்டும்.

பிள்ளைகள் உடற்பயிற்சி செய்யும்போது, பெற்றோரும் அவர்களுடன் இணைந்து எளிய உடற்பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

பூங்காக்களில் குழந்தைகளுடன், எளிய நடைபயிற்சி மேற்கொள்ள வேண்டும். இது குழந்தைகளுக்கு புத்துணர்ச்சியை அளிக்கும்.

குழந்தைகளை வீட்டிற்குள் அடைத்து வைக்கவேண்டாம். வெளியில் சென்று விளையாட அனுமதிக்கவேண்டும்.

படிக்க, விளையாட, டிவி பார்க்க என தனித்தனியே நேரம் ஒதுக்கி அதற்கான அட்டவணை தயாரித்து பின்பற்ற வைக்க வேண்டும்.

சரியான கலோரி அளவுகளில், ஆரோக்கியமான உணவுகளை தயார் செய்து தர வேண்டும். “ஜங்க் புட்”களை தவிர்க்க வேண்டும்.

“டயட்” இருப்பதன் நன்மைகளை எடுத்துக்கூறி பின்பற்ற வைக்க வேண்டும்.

அனைத்தையும் ஒரே நாளில் நடைமுறைப்படுத்தாமல் சிறிது சிறிதாக பழக்க வழக்கத்திற்கு கொண்டு வரவேண்டும்.

உடல் எடை அதிகரிக்கவும், இளைக்கவும், மருத்துவ ரீதியான முயற்சிகளில் இறங்கவேண்டாம்.

இதை குழந்தைகள் பின்பற்றினால், மூளையும் மனதும் புத்துணர்ச்சி பெற்று, படிப்பில் அதிக அக்கறையுடன் ஈடுபாடு காட்டுவர்.

# சுதந்திர தாகம்

இறைவனின் படைப்பில்
குறைப்பிரசவமா நாங்கள்
சுதந்திரம் இருந்தும்
எங்குமே நிரந்தரமாக
நிலைக்க
முடியவில்லையே
ஒரு வேளை
உணவுக்காக
ஓராயிரம் மைல்
நடக்கும் அவல நிலை
சந்திக்கும் சவால்கள்
சிந்தனை செய்யும்
முன்பே
சிலையாக நிற்கும்
நிபந்தனைகள் சுதந்திர
நாட்டில்,
கற்பே களவாடப்படும்
காமக் கொடூரங்கள்
துன்பத்தில் கூட
துவளவில்லை - ஆனால்
துயருறுகின்றோம் மானம்
காக்க துணையின்றி
ஜனநாயகக் காலமாம்
இது - ஏனோ
எங்களால் மட்டும்
ஜகத்தில் நிலைக்க
முடியவில்லை.
சொந்த நாட்டில்
வாழ முடியவில்லை
சுதந்திரமாய்
ஏக்கங்களோடு
வாழும்நிலை - அயல்
நாட்டில்
“புலம் பெயர்ந்தோர்”
என்ற பெயருடன்
இறைவா இதனை
இல்லாமலாக்க
இக்கணமே
இரங்கிடாயோ

## இனி வேண்டாம் வேறுபாடுகள்

*இன்று இலட்சியம் கொள்வோம்*

*இப்படி:*

**பேதம் பேசுவதைவிட சாவதே மேல்**
**பிரிவுகளை வளர்ப்பதை விட**
**பிறவாது இருப்பதே மேல்**

**வர்ணச்சிரமம் என்று சொல்லி**
**வளமான நம் நாட்டிலும் – மனித**
**வர்க்கப் பிரிவுகளை இதுவரை**
**வளர்த்து விட்டோம் – இனியும்**
**வரலாறு இப்படியே தொடரணுமா?**

**இனிவேண்டாம் இம்மியளவும்**
**இனவேறுபாடுகளும், மதவேறுபாடுகளும்,**
**இரத்தத்தின் நிறமும், இறை நெறியும் ஒரு சேர**
**இருக்கும் போது சமத்துவமே சரித்திரமாகட்டும்.**




## பொதுக்காலத்தின் நான்காம் ஞாயிறு
## 02.02.2014
[ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல்]

**வாசக விளக்கம்:** இன்று நமது தாய்த்திருச்சபையானது ஆண்டவர் இயேசுவை ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்த விழாவினைக் கொண்டாட அழைக்கின்றது. மலாக்கி நூலில் இருந்துவரும் முதல்வாசகம் "எங்களுக்கு எதுவும் சொந்தமில்லை அனைத்தும் இறைவனுக்குச் சொந்தம் "இதன் அடையாளமாக எங்களது தலைச்சன் பிள்ளைகளையும் உழைப்பின் முதற்கனிகளையும் இறைவனுக்கே காணிக்கையாக்குகின்றோம்" என இஸ்ராயேல் மக்கள் இறைவனுக்கு காணிக்கை செலுத்தியதை நினைவூட்டுகின்றது. கிறிஸ்துவே சாவையும் பாவத்தையும் போக்கும் நித்திய தலைமைக் குரு எனக் கூறும் இரண்டாம் வாசகம் நம் அனைவருக்கும் கிறிஸ்து உதவி செய்யவும் வாழ்நாள் முழுவதும் சாவைப் பற்றிய அச்சத்திலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும், இருளிலிருந்தும் நம்மை மீட்க துன்பங்களுக்கு உள்ளாவார் என்றும் விளக்குகின்றது. நற்செய்தியானது பழைய ஏற்பாட்டு சட்டங்களை உள்ளடக்கியதாகவும், அச்சட்டங்களுக்கு அன்னை மரியா உட்பட்டவராகவும் சித்தரிக்கின்றது. கடவுள் மனிதனைச் சார்ந்து வாழ்வதன் மூலமே மனிதகுலம் முழுவதையும் மீட்டெடுக்க விரும்புகின்றார் எனவேதான் இயேசு மனித ஊன் இரத்தம் சாவு இவற்றை நம்மோடு பகிர்ந்து நம்மை மீட்கிறார். எனவே நாமும் எமது வாழ்வை மற்றவர்களுக்காக வழங்க அர்ப்பணிக்க வரம் வேண்டி தொடரும் பலியில் பங்குகொள்வோமாக.

**முதல் வாசகம் :** மலாக்கி 3:1-4

நீங்கள் தேடுகின்ற தலைவர் திடீரெனத் தம் கோவிலுக்கு வருவார்.

**பதிலுரைப்பாடல் :** படைகளின் ஆண்டவர் இவர், இவரே மாட்சி மிகு மன்னர்.

**இரண்டாம் வாசகம் :** எபி 2:14-18

எல்லாவற்றிலும் தம் சகோதரர் சகோதரிகளைப் போல் ஆனார்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா இம்மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி இதுவே உம் மக்களாகிய இஸ்ரயேலுக்குப் பெருமை அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் :** லூக் 2:22-40

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

அடிமைத்தனத்திலிருந்தும், இருளிலிருந்தும் எம்மை மீட்ட இயேசுவின் திருப்பணியை தொடர்ந்தாற்றும் தூய திருச்சபைக்காகவும், திருப்பீடத்தை அலங்க -ரிக்கும் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் தமது அர்ப்பண வாழ்வில் நிலைத்து அறப்பணி ஆற்றிட வேண்டிய வல்லமையை அவர்கள் மீது பொழிந்தருள வேண்டுமென்று...

மோயீசன் அருளிய சட்டத்தை நிறைவேற்ற இறைமகன் இயேசுவை ஜெருசலேம் ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்த மரியாவை போன்று நாமும் இறைவன் எமக்குத்தந்த கற்பனைகளையும் திருச்சபை அருளிய கட்டளைகளையும் ஏற்று எமது வாழ்வையும் இறைவனுக்குகந்த வாழ்க்கையாக வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று...

இயேசு தம் வாழ்வை மனுக்குலத்துடன் பகிர்ந்து நிறைவாழ்வை கொடுத்ததுபோல எம் வாழ்வும் நிறைவாழ்வை அனுபவிக்க வழிசமைக்கவும், அநீத செயல்களால் தாக்கப்படும் எம் நாட்டு மக்களின் வாழ்வில் விடுதலை கிடைக்கவும், பசி, துன்பம், நோய்களால் பாதிப்படைந்தோர், ஆறுதல் பெறவும் எரியும் மெழுகுதிரிபோல் அர்ப்பணத்தின் அடையாளமாக நாம் திகழவும் வரமருள வேண்டுமென்று

---

## பொதுக்காலத்தின் ஐந்தாவது ஞாயிறு
## 09.02.2014

**வாசக விளக்கம்:** இன்றைய முதல் வாசகத்தால் இறைவாக்கினர் எசாயா உண்மையான நோன்பின் குறிக்கோளை விளக்குகின்றார் நேர்மையான தீர்ப்பு சகோதரனிடத்தில் அன்பு, கைம்பெண்களையும் அனாதைகளையும் துன்புறுத்தாமை, உள்ளத்திலும் மற்றவர்களுக்கு தீங்கு எண்ணாமை, ஆகிய நன்நடத்தைகள் நோன்பை விட சிறந்தது என்கின்றார். சிலுவையின் போதனையை ஒளிவு மறைவின்றி எடுத்துரைக்கும் தூய பவுல் அடியார் "கடவுளின் மடமை மனிதரின் ஞானத்தை விட ஞானமிக்கது. கடவுளின் வலுவின்மை மனிதரின் வன்மையை விட வன்மை மிக்கது" என விளக்குவதை இரண்டாம் வாசகத்தில் காண்கின்றோம். நற்செய்தியின் வழியாக இயேசு நம்மை உலகின் உப்பாகவும், ஒளியாகவும் இருக்க அழைக்கின்றார். உப்பு எப்படி உணவை பராமரிக்கவும் சுவையூட்டவும் உதவுகிறதோ, அதைப்போல் நாமும் சமுதாயத்தைப் பேராசை, இச்சை, அநீதி, பொறாமை, பொய்மை போன்ற தீமைகளிலிருந்து காப்பாற்றி நீதி, நேர்மை, அன்பு, அமைதி, பரிவு, மன்னிப்பு, சமத்துவம் என்னும் கிறிஸ்துவின் நற்பண்புகளில் சுவையூட்டவும், ஒளியின் பாதையில் ஒளியின் மக்களாக நடக்கவும் இறையருள் வேண்டிட பலியில் இணைவோமாக.

**முதல் வாசகம் :** எசா 58:7-10

உன் ஒளி விடியல் போல் எழும்

**பதிலுரைப்பாடல் :**

ஆண்டவருக்கு அஞ்சுவோர் இருளின் ஒளியென மிளிர்வர்.

**இரண்டாம் வாசகம் :** 1 கொரி 2:1-5

கடவுளைப் பற்றிய மறைபொருளை உங்களுக்கு அறிவித்தேன்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா உலகின் ஒளிநானே என்னைப் பின்செல்பவர் இருளில் நடக்க மாட்டார் வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் :** மத் 5:13-16

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

உலகிற்கு உப்பாகவும் ஒளியாகவும் புளிக்காரமாகவும் என்றும் விளங்கும் தூய திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் பொதுநிலையினர் ஆகிய அனைவரும் தமது பணிவாழ்வால் திருச்சபையை வளர்க்கவும், மக்களுக்கு ஒளியாக வழியாக வாழ்வாகத் திகழவும், வேண்டிய வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று...

எமது நாட்டை ஆட்சி செய்வோரும் அதிகாரத்தில் இருப்போரும் தீமைகளில் இருந்து நாட்டைக் காப்பாற்றி நீதி நேர்மை அன்பு பரிவு அமைதி, மன்னிப்பு, சமத்துவம் என்னும் கிறிஸ்துவின் நற்பண்புகளைக் கைக்கொண்டு ஒளியான நல்வாழ்வை அனைவருக்கும் வழங்கிட வேண்டிய அருள் வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று...

இயேசுவின் சீடர்கள் உலகிற்கு உப்பாகவும் ஒளியாகவும் விளங்கியதுபோல் திருமுழுக்கால் பொதுக்குருத்துவத்திற்கு அழைக்கப் பெற்ற நாமும் நம்மையும் பிறரையும் உலகத்தையும் காக்கவும் வழிநடத்தவும் எமது பாவ வாழ்வில் இருந்து விடுபடவும் தேவையான அருள் வரங்களை எம்மீது பொழிந்தருள வேண்டுமென்று

---

# இலங்கையின் வேதசாட்சிகள்



## அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை (முன்னாள் பேராயர்)

தமிழில் அருட்தந்தை அ. உதயதாஸ்

கிறிஸ்தவ கத்தோலிக்கராக போர்த்துக்கேயர் பலவந்தப்படுத்தி மதமாற்றம் செய்தனர் என்று குறைகூறும் பலரும் உள்ர். பலவந்தப்படுத்தல் அல்லது கட்டாயப்படுத்தல் எனும்போது பல அர்த்தங்கள் அதற்கு உள.

உடல் ரீதியாக (மரண பீதியை ஏற்படுத்தல்) பொருளாதார ரீதியாக (உடமைகளை அழித்தல், தொழிலை சிதைத்தல்) அரசியல் ரீதியாக (தங்களுடைய உரிமைகளைப் பாதித்தல்) மேலும் பல வழிகளில் பலவந்தப்படுத்தலாம். அதேவேளை பணமோ, பொருளோ, பதவிகளையோ கொடுத்தும் மனிதர்களை வென்றெடுக்கலாம். அன்றும் இன்றும் இதேபோன்ற நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. இதை போர்த்துக்கேயர் மட்டுமல்ல, ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்போரும் செய்துள்ளனர். இன்றும் இப்பேர்ப்பட்ட பலவந்தப்படுத்தல்களுக்கு முகங்கொடுக்கும் கத்தோலிக்கரின் நிலை தெரிந்தவர்களுக்கே தெரியும்.

இது இவ்வாறிருக்க, போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்பே இந்நாட்டில் கிறிஸ்தவ சமயம் பரவியிருந்ததை யாராலும் மறைக்க முடியாது. மேலும் தேசிய அரசாட்சியின் போதே கிறிஸ்தவ சமயத்தை ஏற்று ஒழுகியோர் பலர் உள்ர். இதற்கு சிறந்த உதாரணமாக மன்னார் வேதசாட்சிகள் திகழ்கின்றனர்.

கி.பி 1545களில் இலங்கையின் வடக்கை ஆண்ட தமிழ் மன்னன் சங்கிலியன் காலத்தில் மன்னார் தீவின் வட பகுதிகளில் இருந்து சமயப்பணி புரிந்தார் சின்ன சவேரியார் சுவாமியார் (அதாவது பிரான்சிஸ் சேவியர் முனிவரின் சீடர்களில் ஒருவர்) அவருக்கு செவிமடுத்தோரில் பலரும் கத்தோலிக்கராயினர். இவர்களுக்கு அதனால் எவ்வித உலகியல் நன்மைகளும் கிடைக்கவில்லை. அவர்களும் அவற்றை பொருட்படுத்தாது மகா செல்வமான மறையையே ஏற்றுக்கொண்டனர்.

இதனால் ஆத்திரமடைந்த சங்கிலி அரசனும் அவர்கள் திருமுழுக்கு பெற்ற அடுத்த நாளிலே 600க்கும் மேற்பட்ட விசுவாசிகளை கொன்று குவித்தான். இதைப்பற்றி உரோமையிலுள்ள இயேசு சபையினருக்கு தாம் எழுதிய கடித்தத்தில் புனித பிரான்சிஸ் சேவியர் முனியோர் "கிறிஸ்த மறையைப் பற்றி அரசனிடம் காணப்பட்ட கோபாவேசம் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். அக்கடிதம் இன்னமும் அங்கு இருப்பதைக் காணலாம். இதன் மூலம், கிறிஸ்தவ மறையானதும் பலவந்தமாக எம்மீது திணிக்கப்பட்ட விடயமல்ல என்றும், அதை உலகியல் நன்மைகளின் பொருட்டு ஏற்றுக்கொண்டோம் என்றும் புலப்படுகிறது. மேலும் இலங்கையிலும் விசுவாச வாழ்வின் பொருட்டு தம் உயிரைக் கையளித்த கத்தோலிக்கர் இருந்தனர் என்பதும் கண்கூடு.

இதேபோல ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க வேதத்திற்காக தம் உயிரைக் கொடுத்த விசுவாசிகள் பலர் ஆனாலும் துர்அதிர்ஷ்ட விதமாக இவர்களின் எவரும் அதிகாரப் பூர்வமாக வேதசாட்சிய புனிதர்களாக உயர்த்தப்படவில்லை என்பது வேதனைக்குரியதே.

மன்னார் வேதசாட்சிகள் பற்றிய வரலாறு பரம்பரை பரம்பரையாக சொல்லப்பட்டு வருகிறது. மேலும் கீழைத்தேய கத்தோலிக்க வரலாற்றில் அதைப்பற்றிய குறிப்புக்களும் உள்ளன. இவர்களை புனிதர்களாக உயர்த்துவதற்கான உத்வேகம் கி.பி 1925களில் வெளிப்பட்டது. இதன் நிமித்தம் மன்னார் தோட்டவெளிப் பிரதேசத்தில் இவர்களைத் தாட்ட இடமாகக் கருதும் இடத்தில் வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயம் அமைக்கப்பட்டிருப்பதை இன்னும் நாம் காணலாம்.

பின்னர் 1945இல் இதன் 400 வருட பூர்த்தியை முன்னிட்டு தூய நற்கருணை மாநாடு இங்கே நிகழ்த்தப்பட்டது. இக்காலத்தில் தான் துரதிர்ஷ்ட விதமாக பத்திரிக்கைகளில் இம் மறைசாட்சிகள் பற்றிய சாதிப் பிரச்சினையை தூண்டிவிட்டனர். இது காட்டுத்தீயை போல பரவிய வேளை அந்நேர யாழ்ப்பாண ஆயர் மேதகு ஜோ.ஏ. கியமோர் ஆண்டகை அந்தக் கதைகளை நிறுத்துமாறு பணித்தார்.

ஆசியாவில் அதிகாரப் பூர்வமாக பாரிய அளவில் புனிதர்களாகப் பிரகடனப்படுத்தப்பட்ட வேதசாட்சிகளைக் கொண்ட நாடு ஜப்பான் ஆகும்.

---

## காலி மறைமாவட்ட கலேகான புனித பிரான்சிஸ் சேவியர் குருமட பழைய மாணவர்கள் ஒன்று கூடல்



காலி மறைமாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க ஆண்டகையின் வழி நடத்தலின் கீழ் காலி மறைமாவட்ட கலேகான பிரதேசத்தில் அமைந்துள்ள சிறிய குருமடமான புனித பிரான்சிஸ் சேவியர் குருமட பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து பழைய மாணவர் சங்கம் ஒன்றை உருவாக்க இருப்பதால் அதற்கான முதற் கூட்டம் வருகிற 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறுகிறது. இக்குருமடத்தில் தங்கி கல்வி கற்ற பழைய மாணவர்கள் அனைவரையும் இத்திட்டத்திற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

# தேசிய துறவறத்தார் தினம். 14-02-2014

இலங்கையில் வாழும் மற்றும் பணியாற்றக் கூடிய துறவறத்தார் அனைவரும் **"ஒன்றிணைந்த மாற்றத்தின் சக்தியாக"** ஒன்று கூடும் நாள். செபிப்பதற்கும், தியானிப்பதற்கும் மற்றும் கொண்டாடுவதற்குமான நாளாகவும் இது திகழ்கின்றது. இலங்கை திருச்சபை வரலாற்றில் இதுவே முதல் தடவையாக தேசிய துறவறத்தார் தினம் கொண்டாடப்படுகிறது.

**கருப்பொருள் : "இன்றைய சூழமைவில் அன்னை மரியாவின் இறைவாக்கினர் பணி"**

திருச்சபையின் வரலாற்றில், துறவற சபைகளின் தனி வரங்கள், எப்பொழுதும் அதன் புனிதத் தன்மையிலும், பணி வாழ்விலும் ஆரோக்கியமான மாற்றங்களை திருச்சபையின் வளர்ச்சிக்காக காலத்தின் தேவைகளுக்கேற்ப உருவாக்குகிற சக்தியாகவே இருந்து வருகிறது.

இவற்றை நாங்கள் புனிதர்களான பெனடிக்ட், பிரான்சிஸ், இக்னேசியஸ் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றில் காணக்கூடியதாக இருக்கின்றது.

## துறவறத்தார் நிலைப்பற்றி திருத்தந்தை பிரான்சிஸ்

திருத்தந்தை பிரான்சிஸ் உலகிலுள்ள அனைத்து துறவற சபைகளின் முதல்வர்களை சந்தித்து உரையாடுகையில் 2015 ஆண்டை துறவற வாழ்வின் ஆண்டாக அர்ப்பணிக்கவுள்ளதாக அறிவித்தார்.

- ✞ துறவற வாழ்வை தேர்ந்தெடுத்தவர்கள் உலகை விழிப்படையச் செய்யவேண்டும். உலகின் பணித்தளங்களுக்குச் சென்று இறைவன் வெளிப்படுத்தியவாறு கூடு விட்டு பறந்து சென்று சேவை செய்யவேண்டும். இதுவே இறைவனைப் பின்பற்ற சிறந்த வழி.
- ✞ துறவிகள் தமது உதவியாளர்கள் அல்ல என்பதை ஆயர்கள், குருக்கள், அறிந்து கொள்ளவேண்டும்.
- ✞ ஒவ்வொரு துறவற சபையும் தத்தம் தனிவரத்திற்கேற்ப தங்களது பணித்தளங்களை தெரிவு செய்யவேண்டும்.
- ✞ கல்விப் பணியில் ஈடுபடும் ஒவ்வொரு துறவற சபைகளும் கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்து பணியாற்ற வேண்டும்.
- ✞ கல்வி என்பது அறிவின் முறைமையின் விழுமியங்களின் பரிமாற்றமாகும். இதன் வழியாக நாம் விசுவாசத்தையும் பகிர்கின்றோம். கல்வி புகட்டும் ஒவ்வொருவரும் தங்கள் கற்பித்தலின் மூலம் எவ்வாறு கிறிஸ்துவை இந்த மாறிவரும் தலைமுறையினருக்கு அறிவிக்கிறார்கள் என்பதை உணரவேண்டும்
- ✞ குருமட மாணவர்களை நெறிப்படுத்துவதென்பது ஒரு கலை. அது ஒரு காவல்துறை வேலையன்று. எவ்வாறு கனிந்த இதயமுள்ள துறவிகளை உருவாக்கவேண்டும் என்கின்ற இலக்கே முக்கியமானதாகும்.

## இலங்கையில் துறவறசபைகள் சில தரவுகள்

| | |
|---|---|
| **1. மொத்த துறவறசபைகள்** | **57** |
| ◆ குருக்களுக்கான துறவறசபைகள் | 17 |
| ◆ அருட் சகோதரர்களுக்கான துறவறசபைகள் | 04 |
| ◆ அப்போஸ்தலிக்க அருட் சகோதரிகளுக்கான சபைகள் | 31 |
| ◆ தியான அருட் சகோதரிகளுக்கான சபைகள் | 05 |
| **2. மொத்த துறவற சபை அங்கத்தவர்கள்** | **3363** |
| ◆ துறவற குருக்கள் சபை அங்கத்தவர்கள் | 705 |
| ◆ துறவற அருட்சகோதர சபை அங்கத்தவர்கள் | 130 |
| ◆ **மொத்த ஆண் துறவறத்தார்** | **835** |
| ◆ அப்போஸ்தலிக்க அருட் சகோதரிகள் துறவற சபை அங்கத்தவர்கள் | 2331 |
| ◆ தியான அருட் சகோதரிகள் துறவற சபை அங்கத்தவர்கள் | 197 |
| ◆ **மொத்த பெண் துறவறத்தார்** | **2528** |
| **3. மறைபரப்புப் பணிக்காகத் துறவற சபைகளினால் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட இலங்கை துறவறத்தார்** | **297** |
| ◆ துறவற குருக்கள் | 48 |
| ◆ துறவற சகோதரர்கள் | 8 |
| ◆ **மொத்தம்** | **56** |
| ◆ அப்போஸ்தலிக்க துறவற சகோதரிகள் | 233 |
| ◆ தியான துறவறசகோதரிகள் | 8 |
| ◆ **மொத்தம்** | **241** |

## இலங்கையில் துறவற சபைகளின் ஒருங்கமைப்பு



இலங்கையில் பணிபுரியும் ஆண்களுக்கும் பெண்களுக்குமான துறவற சபைகள் தத்தமது தனிவரங்களினூடாக திருச்சபையில் பல்வேறு இடங்களில் பலவித பணிகளை செய்து வருகின்றனர். இவை தனித்தனி துறவற சபைகளாயிருந்தாலும் துறவற சபைகளுக்குரிய பொதுத்தன்மையையும் கொண்டு ஒன்றிணைந்தும் செயற்படுகின்றனர். இவ்வாறான ஒருங்கிணைந்த செயற்பாடுகளை துறவற சபைகளின் அதியுயர் அதிபர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட அமைப்பு வழிகாட்டி வருகின்றது. இவ்வமைப்பே,

Conference of Major Religious Superiors (CMRS) in Sri Lanka

### இலங்கை துறவற அதியுயர் அதிபர்களின் மன்றம்

இலங்கையில் பணிபுரியும் அனைத்து துறவற சபைகளும் இம்மன்றத்தில் அங்கத்தவர்களாயுள்ளனர். இந்த அமைப்பின் கீழ்

1. **துறவற உருவாக்கத்திற்கான செயற்குழு**
   Committee for Religious Formation (CRF)
2. **நீதி, சமாதானம், படைப்பகளுடனான ஒன்றிப்பு செயற்குழு**
   Justice Peace and Integrity of Creation Committee (JPIC)

ஆகியன இயங்குகின்றன.

இவை தவிர, கடந்த ஆண்டு முதல் ஒருங்கிணைந்த செயற்பாடுகளை நாடு முழுவதும் செயற்படுத்தும் நோக்குடன் மறைமாவட்டங்கள், மறைவட்டாரங்கள் ரீதியாக துறவறத்தாரின் பிரதேச குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### பிரதேச துறவற அலகு Regional Religious Unit (RRU)

இப்பிரதேச அலகுகள் தத்தம் பிரதேசங்களில் செய்ய வேண்டிய ஒருங்கிணைந்த செயற்பாடுகளை உய்த்துணர்ந்து தத்தமது சபைகள் என நோக்காது ஒன்றுபட்ட துறவறத்தார் எனும் நிலையில் செயற்படத் தூண்டும்.

## சமகால சூழமைவில் அன்னை மரியாளின் இறைவாக்கினர் பணி

21ஆம் மனிதனுடைய சாதாரண வாழ்விற்கே பல்வேறுபட்ட சவால்களை விடுக்கின்ற ஓர் விஞ்ஞானத்திலே அதிவேகமாக முன்னேற்றம் கண்டுவிட்ட, முன்னேற்றம் காணுகின்ற ஒரு நூற்றாண்டாகப் பரிணமித்திருக்கின்றது. இவ்வாறான சூழமைவிலே வாழுகின்ற மனிதனுக்கு சமயம், இறைகொள்கை, வழிபாடு, வழிபாட்டுத் தலங்கள் எல்லாம் ஏன்? அவை தேவைதானா? அவற்றால் என்ன பயன்? என்று பல கேள்விகளுக்கு மேல் கேள்வி கேட்டுக் கொண்டு வாழ்வை நடத்த எத்தனிக்கும் பொழுது மனிதனுடைய ஆளுமையை, ஏன் முழு மனிதனையுமே பாதிக்கின்ற காரணியாக, அரசியல், சமூகம், பொருளாதாரம், சமயம் என்று தாக்கக் காரணிகளும் மனித வாழ்விற்கு சவால் விடுக்கின்றது. இச்சூழமைவில் மனித மாண்பு, மனிதம், மனித உயிர் என்பனவற்றிற்கும் அர்த்தம் சிறிதளவேனும் இல்லாமல் போகும் சூழமைவில் சமயத்திற்கு மாற்றுக்கருத்துக் கூறும் நாஸ்தீகக் கொள்கைகளுக்கு மத்தியில் இறைவாக்குப் பணி, மறைப்பணி, சமயப்பணி என்பது மிகப் பாரியதொரு பணியாக அமைவதுடன் சவால் நிறைந்த பணியாகவும் இருக்கின்றது. இவ்வாறான சவால் நிறைந்த பணிக்கு அன்னை மரியாளின் இறைவாக்கினர் பணி எவ்வாறு ஊக்கம் தருகின்றது.

இறைவாக்கினர் என்பவர் கடவுளுடைய பிரதிநிதியாக இருந்து கொண்டு சமகாலத்திற்கு ஏற்ற வகையிலே இறைவார்த்தையைப் பகிர்ந்து மக்களின் ஆன்மாவிற்கும், உணர்வுகளிற்கும் விருந்து வைக்கிற ஒரு இறைப்பணியாளன் ஆவான். இன்றைய இந்த நவீன உலகிலே இவ்வாறான கடவுளின் வார்த்தையின் கருவியாக அவரின் வார்த்தையின் ஊடகமாக இருக்கப் போகின்ற ஒவ்வொரு இறைவாக்கினனுக்கும் சவால்கள் எப்போதுமே காத்துக் கிடக்கின்றன. இவ்வாறான பணியாளர்களுக்கு அன்னை மரியாளின் வாழ்வும், பணியும் ஒரு எடுத்துக்காட்டாக இருப்பதுடன், ஒவ்வொரு பணியாளுக்கும் அன்னை உந்து சக்தியாகின்றார்.

அன்னையினுடைய வாழ்வு பிறப்பிலிருந்து அவள் விண்ணேற்றம் அடையும் மட்டும் ஓர் மறை அறிவிப்பு வாழ்வாகவே இருந்தது. "ஆம்" என்று வானதூதருக்கு மங்கள வார்த்தை நேரத்திலே பதில் கொடுத்ததிலிருந்து சிலுவை அடியிலே இயேசுவின் உயிர் பிரிதலை கண்ணூடாகக் கண்டு உயிரற்ற அவரது உடலைத் தன் மடியிலே







# NATIONAL RELIGIOUS DAY

## දේශීය පැවිදි දිනය

## தேசிய துறவறத்தார் தினம்

14 மாசி 2014

# "Prophetic Role of Mary Today"

# මේදින මරි මව්ගේ දිවැසිවර කාර්ය

# இன்றைய சூழமைவில் அன்னை மரியாவின் இறைவாக்கினர் பணி



Our Lady of Lanka Basilica, Tewatte

இடம் : இலங்கை அன்னை பசிலிக்கா, தேவத்தை

Let us pray for the Religious Sisters, Brothers and Fathers.

කන්‍යා සොහොයුරියන්, සහෝදරතුමන්ලා සහ පූජ්‍ය ප්‍රසාදීන් උදෙසා අප දෙව්දු යදිමු.

துறவற சகோதரிகள், சகோதரர்கள், குருக்களுக்காக செபிப்போம்.

சுமக்கின்ற பரியந்தம் அன்னையின் வாழ்வு சவால்களை தாங்கிச் செல்கின்றது. 12 வயதிலே இயேசுவினுடைய கேள்வி, கானாவூர் திருமணத்திலே அவரது பதில் - இவற்றைவிட பாடுகள் அனுபவத்திலே இயேசுவிற்கு இழைக்கப்பட்ட ஒவ்வொரு துன்பங்களையும் மனதிலே தாங்கி, இருதயத்திலே மதித்துக் கடவுளின் சித்தத்திற்கேற்ப அனைத்தையும் அமைதியான அமைந்த உள்ளத்துடன் இருந்து சிந்தித்து வந்தாள். கடவுளின் வார்த்தையான மகன் இயேசுவைத் தன் உதரத்திலே தாங்குமுன் மரி அவரை சிந்தனையில், இதயத்தில் தாங்கினாள். துன்பங்கள் சவால்கள் மத்தியிலும் அந்த வார்த்தையாம் இயேசுவிற்குப் பணிபுரிந்தாள். புனிதத்தை அடைவதற்கு உலக வாழ்வே ஓர் பாதை என இறைவாக்கினராக வாழ்ந்து கற்பித்தாள். இவை அனைத்திற்கும் காரணம் கடவுளைத் தன் உள்ளத்தில் இருத்தி சிந்தித்தும் (லூக் 2:19) கடவுளின் சித்தத்திற்கு ஒவ்வொரு நொடியும் விட்டுக் கொடுத்ததும் ஆகும்.

திருமுழுக்கின் வழியாக இறைவாக்குப் பணிக்கு அழைக்கப்பட்ட, ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் இறைவாக்குப் பணி நேரத்திலே சவால், துன்பம், மனக்கசப்பு, புறக்கணிப்பு என்பன காத்துக் கிடக்கின்றன. அன்னை மரி காட்டிய முன்னுதாரணம் போல அனைத்தையும் உள்ளத்திலே இருத்தி சிந்திக்கின்ற அமைதியான அமைந்த உள்ளம் தேவை. இயேசுவே ஆண்டவர் என அறிக்கையிட முன் இயேசுவை, அவரது வார்த்தையை சிந்தனையிலும், இருதயத்திலும் கருத்தரிக்கின்ற நல் மனப்பக்குவம் தேவை.



உலகம் எந்தவிதமான சவால், சோதனைகளை, நவீனத்தின் மூலம் தந்தாலும், புனிதத்துவத்தை அடைய உலக வாழ்வே சவால்கள் மத்தியில் பாதை ஆகின்றது என ஏற்றுக் கொண்டு உலகின் மத்தியில் உப்பாக, புளியாக, ஒளியாக இருக்கின்ற சக்தி தேவை. என்ன துன்பம் சோதனை வந்தாலும் அவை மாட்சிமிகு உயிர்ப்புக்கு விண்ணேற்றத்திற்கான பாதையென உறுதி கொள்ள ஆன்மீக, ஆத்மீக திடம் தேவை. இவை அனைத்தும் அன்னை மரியிடம் அமைந்திருந்தது. அவள் பொக்கிஷமானவள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் மறைபணியாளனாக மாறுவதற்கு இந்த அன்னைமரிப் பொக்கிஷத்தின் பணி இறைவாக்கினள் வாழ்வு உதாரணமாக மாறும்பொழுது சமகாலத்திலே மறையறிவிப்புப் பணி சவால்கள் மத்தியிலும் சுலபமாகும். பணிக்கு அர்த்தம் நிச்சயமாகக் கிடைக்கும். சமகாலச் சூழலிலே இறைவாக்குப் பணிபுரிய அன்னை மரியாளை முன்னுதாரணமாகக் கொள்வோம். அவரது பாதுகாவலை கேட்போம். மறைப்பணி, இறைப்பணி புரிவோம்.

# விசுவாசத்தின் ஒளி




## திருத்தூது மடல் பகுதி 01

# அன்பினில் நம்பிக்கை வைத்தோம்

## (1யோவா 4:16)

**15. கிறிஸ்தவ விசுவாசத்தின் முழுமை**

"தந்தை ஆபிரகாம் நான் வரும் காலத்தைக் காணமுடியும் என்பதை முன்னிட்டுப் பேருவகை கொண்டார்" (யோவா 8:56) இயேசு கூறிய இவ்வார்த்தைகளின்படி ஆபிரகாமின் விசுவாசம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஒரு விதத்தில் இது அவரது ஓர் அற்புதச் செயலை எதிர்நோக்கியது. எனவே வேதசாட்சிகள் அனைவரும் விசுவாசத்தாலேயே மீட்கப்பட்டனர் என்பதைப் புனித அகுஸ்தீனார் அறிந்து, ஏற்கனவே வந்தவர்கள் கிறிஸ்துவில் கொண்ட விசுவாசத்தினால் மட்டும் அன்று ஆனால் இனி வரவிருக்கும் கிறிஸ்துவில் கொண்ட விசுவாசத்தினால்தான் என்று, எதிர்கால விசுவாசத்திற்கு இழுத்துவரச் செய்கிறார். கிறிஸ்தவ விசுவாசமென்பது கிறிஸ்துவையே மையாமாகக் கொண்டது. "இயேசுவே ஆண்டவர் என வாயார அறிக்கையிட்டு, இறந்த அவரைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார்" என (உரோ10:9) உள்ளூர நம்ப வேண்டுவது நியதி. பழைய ஏற்பாட்டு சங்கதி ஒவ்வொன்றுமே இயேசுவை எதிர்நோக்கியே கூறப்பட்டது. மேலும், "அவர் சொல்லும் "ஆம்" எனும் சொல் வழியாக கடவுள் அருளும் எல்லா வாக்குறுதிகளும் நிறைவேறுகின்றன" (2 கொரி 1:20). கடவுளின் நம்பகத்தன்மையை வெளிப்படுத்தியதே இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு. விசுவாச அறிக்கையின் மையப்பொருளான, கடவுளின் அளவு கடந்த அன்பை இஸ்ரயேல் நினைவு கூறத் தக்கதாக, விசுவாசத்தின் மீதான பார்வை விரிவடைய வேண்டி, இயேசுவின் வாழ்க்கை முறையானது, கடவுளின் உண்மையான பற்றுடைய ஈடுபாட்டையும், நம் மீது அவர் காட்டிய எல்லையில்லா அன்பின் வெளிப்பாடகாவும், விளங்கச் செய்கிறது. கடவுள் இயேசு வாயிலாக நம்மோடு பேசிய வார்த்தைகள், ஏதோ பற்பல உரையாடல்களில் ஒன்று அல்ல, ஆனால் அதுவே அவரது அழிவில்லாத வார்த்தைகள். (எபி 1:1-2) புனித பவுல் (உரோ 8:31-39) கூறுவதைப் போல, இதைவிட வேறெந்த சிறந்த அன்பையும் கடவுளால் நமக்குக் காட்ட இயலாது. கிறிஸ்தவ விசுவாசம் என்பது அவ்வாறு அன்புறவில் கொண்ட விசுவாசம். அது உலகையே மாற்றவும், வரலாற்றைத் திருப்பவும் முடிவெடுக்கும் திறன் உடையது. "கடவுள் நம்மிடம் கொண்டுள்ள அன்பை அறிந்துள்ளோம்" (1யோவா 4:16) இயேசு வழியாக வெளிப்பட்ட கடவுளின் அன்பில், கடவுள் விசுவாசமே அடிப்படையான உணர்வு என்பதும், இதில் தான் எல்லா உண்மையும் அதன் இறுதி அழிவும் அடங்கும் என்பதும் தெளிவாகிறது.

16. நமது நலனுக்காகவே அவர் மரித்தார் என்பது கிறிஸ்துவின் அன்புக்கும் அதன் நம்பகத்தன்மைக்கும் சரியான ஆதாரமாக விளங்குகிறது. "தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவா 15:13) என்றால் இயேசு தமது சொந்த உயிரைப் பிறருக்காக அர்ப்பணித்தும் அதுவும் அவரது பகைவர்கள் மனம் மாறவேண்டும் என்பதற்காக அல்லவா? கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட நிலையைத் தானே, இன்றும் எங்குமுள நற்செய்திப் பணியாளர்கள் எடுத்துக்கூறி, அதன் மூலம் பிறரை விசுவாசத்தின் உச்ச நிலைக்கு அழைத்து கண்ணீர் உகுக்கச் செய்கிறார்கள்? அந்நேரம் தானே கடவுளின் எல்லை கடந்த அன்பு எப்புறமும் பொங்கி எழுந்தது? "தங்கள் ஊடுருவக் குத்தியவரை உற்று நோக்குவார்கள்" என (யோவா 19:37) சீடராகிய யோவானும், அருகிருந்த அன்னை மரியாளும் கூட அதற்குச் சாட்சியம் கூறிவந்தார்கள் அல்லவா? "இதை நேரில் கண்டவரே இதற்குச் சாட்சி. அவரது சாட்சி உண்மையானதே. அவர் உண்மையையே கூறுகின்றார் என்பது அவருக்குத் தெரியும்" (யோவா 19:35) என்று ஆங்கில நாடகம் ஒன்றில், கல்லறை மீது வரையப்பட்ட மரித்த இயேசுவின் ஓவியத்தைக் கண்ட இளவரசன் மிஸ்டின், "இவ் ஓவியத்தையே உற்று நோக்குபவரின் விசுவாசமும் கூட பறிபோகும்" என்கின்றான். கிறிஸ்துவின் உடல் மீது கொண்டு வரப்பட்ட கொடுமை வாய்ந்த வாதைகளைக் குறிப்பிட்டது அந்த ஓவியம். இருந்தும், இயேசுவின் இறப்பினைத் தியானிப்பதன் மூலம், விசுவாசம் வலுப்பெறுவதையும் ஒளியூட்டப் பெறுவதையும் கண்டனர். அதுவே கிறிஸ்து மீது கொண்ட உண்மையான வெளிப்பட்ட விசுவாசமெனவும், நமக்கு மீட்பு வழங்க ஏதுவாக ஏற்றுக் கொண்ட மரணம் என்பதும் தெளிவாகியது. சாவின் வழியாகத் தமது அன்பை வெளிக்காட்டாமற் போயிருந்தால், எந்த அளவுக்கு நம்பியிருப்போம்? எனவே, கிறிஸ்து தன்னையே முழுவதுமாக அளித்த பெருங்கொடை எவ்வித சந்தேகத்துக்கும் அப்பாற்பட்டு, என்னை முழுவதுமாக அவரிடம் அர்ப்பணிக்க ஏதுவாயிற்று.

தொடரும்...




# தந்தையின் அன்பு



நடைபாதையில் ஒரு சிறுவன் நின்று கொண்டு இருந்தான். அவன் அணிந்து இருந்த பள்ளி சீருடை முதுகில் புத்தக சுமையை தாங்கிக் கொண்டு, கையில் ஒரு கூடையில் தண்ணீர் பாட்டிலும், டிபன் பெட்டியும் இருந்தது. சந்தேகமே வேண்டாம் அச்சிறுவன் பாடசாலை செல்ல பஸ்சுக்காக காத்துக்கொண்டிருக்கின்றான் என்பது தெரிந்தது.

அச்சமயம் ஒரு வயதானவர் நடைபாதையில் நின்று கொண்டிருந்த சிறுவனைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். “இந்த வழியாக பஸ் வராதே. ஏன் அந்த சிறுவன் இங்கு நின்று கொண்டு இருக்கின்றான். தெரியாமல் நிற்கிறானோ?” என நினைத்துக் கொண்டு அவன் அருகில் சென்று “தம்பி! நீ இங்கு பஸ்சுக்காக காத்துக் கொண்டு நிற்கிறாய் இல்லையா? இங்கு பஸ் வராதே” எனச் சொன்னார்.

“தாத்தா இங்கு பஸ் வரும் எனக்குத் தெரியும்” என்றான் சிறுவன் “இல்லையப்பா. அதே தெரிகிற ரோடு சந்தியில் தான் பஸ் வரும்” எனச் சொல்லிக் கொண்டு கையை நீட்டி இடத்தைக் காட்டினார்.

“இல்லை! இல்லை! பஸ் இங்கு தான் வரும். வேணும்னா தாத்தா பாருங்க சரியாக ஏழரைக்கு பஸ் இங்கு வரும்” என்று கூறினான் சிறுவன்.

சிறுவன் சொல்லி முடிப்பதற்குள் பஸ் வந்து நின்றது. சிறுவன் கதவை திறந்து உள்ளே சென்று, ஆச்சரியத்துடன் நின்று கொண்டிருந்த வயதானவரைப் பார்த்து “பை! பை! தாத்தா ஏன் இந்த பஸ் இங்கு வந்து என்னை கூட்டிக் கொண்டு போகிறது தெரியுமா? இந்த பஸ் ஓட்டுனர் யார் தெரியுமா? இந்த பஸ் ஓட்டுனர் எங்க அப்பா தான்” என்றான்.

“அந்த அப்பா யார்?” தன் அன்பை செலுத்தி மக்களை நேசிக்கும் பரமபிதா, இறைவன் நம்மீது கொண்டுள்ள அளவற்ற அன்பினால், பிரதிபலன் பாராது நமக்கு உதவும் இறைவன் நாம் எங்கிருந்தாலும், எந்த நேரத்திலும், எதைக் கேட்டாலும் நமக்கு நன்மை தரக்கூடிய காரியங்களை நம்மைத் தேடி வந்து நேசத்தோடு செய்வார். கடவுளுக்கு மக்கள் மீது அன்பு செய்யும் மனம் என்றும் குறையாது

நாம் எப்படி இறைவனுக்கு அன்பு செலுத்தமுடியும்? கடவுளே அன்பு! அன்பே கடவுள்!! நாம் நமது அயலானை நேசிப்பது, ஏழைக்கு உதவி செய்வது மூலம் கடவுளை நாம் நேசிப்பது என்பது சாத்தியமான செயலாகும். நீ பிறரை அன்பு செய்வது, இறைவனை அன்பு செய்வதற்கு சமமாகும். ஆகவே நாம் ஒருவரை ஒருவர் நேசிப்போம். எல்லா மக்களும் இறைவனின் சாயலாக படைக்கப்பட்டுள்ளோம் என்பதை நினைவில் கொண்டு எமது வாழ்வினை வாழ முயற்சிப்போம்.

## மனிதநேயப் பண்புகளைப் பேணுவோம்

- ✶ சாதி, சமய பேதங்களை மறந்து ஒற்றுமையாக வாழ்தல் நல்ல பண்பாகும்
- ✶ ஒழுக்கத்தை உயிரிலும் மேலாக மதித்து நடத்துதல் நல்ல பண்பாகும்.
- ✶ பெற்றோரைப் பேணி அவர்கள் மனம் நோகாது மகிழ்வுடன் வாழ உதவுதல் வேண்டும்.
- ✶ வசதி குறைந்த இடங்களில் பாடசாலை அமைத்தல், குழந்தை காப்பகங்கள், அனாதை இல்லங்கள் அமைத்தல் நற்செயலாகும்.
- ✶ எமக்கு உதவும் விலங்குகள், உயிரினங்கள் மேல் நாம் இரக்கம் வைத்தல் வேண்டும்.
- ✶ பெரியோரை மதித்து நடத்தல், மனித நேயப் பண்பின் சிறந்த பண்பாகும்.
- ✶ நாம் இறைவனின் அதி உன்னத படைப்பாக இருப்பதால் இறைவனின் பண்புகள் எமக்கு இருத்தல் வேண்டும்.
- ✶ பெற்றோரையும், ஆசிரியரையும், முதியோரையும் மதித்து நடத்தல் வேண்டும்.
- ✶ “பொய் சொல்லக் கூடாது பாப்பா” என்று பாரதியார் கூறியபடி நாம் பொய் சொல்லாது வாழவேண்டும்.
- ✶ ஒருவர் எமக்கு செய்யும் நன்றியை நாம் ஒருபோதும் மறத்தல் கூடாது

**ஆக்கம் :**
**செல்வன் வி. ஹிலரி, தரம் – 5B,**
**புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரி, கொழும்பு – 13.**

## சிறுவர்களின் கவனத்திற்கு!

புனித பிரான்சிசின் தொடருக்கான விடைகளை நேரகாலத்தோடு எமக்கு அனுப்பி வைக்கவும். காலதாமதமாக கிடைப்பதால் உங்களது பெயர்களை பிரசுரிக்க முடியாமல் உள்ளது. எனவே உங்களது பதில்களை குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.

**நன்றி**

## குட்டிஸ், வரையலாம் வாங்க!



## ஊக்கம் உயர்வு தரும்

- ✦ “அரிது அரிது மானிடராதல் அரிது” என்பது ஔவைக்கூற்று.
- ✦ மனித வாழ்வை மாண்புறச் செய்வது வானளவில் நாம் செய்யும் செயல்களே ஆகும்.
- ✦ இதற்கு இறந்தகால சரித்திரங்கள் சான்றாகின்றன.
- ✦ தளர்வில்லா ஊக்கமே கடினமான முயற்சிகளுக்கு உறுதுணையாகின்றது.
- ✦ ஊக்கம் உள்ளத்திலிருந்தால், செயலில் வெறுப்போ சலிப்போ ஏற்படாது.
- ✦ ஊக்கம் எனும் உணர்வு எம் எண்ணத்தை ஒருமைப்படுத்துகின்றது.
- ✦ இதனால் செயல்களில் வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன.
- ✦ ஊக்கம் மிகுந்தால் தூக்கமும் சோம்பலும் தூர விலகிவிடும்.
- ✦ மாணவப்பருவத்திலேயே இப்பண்பை நாம் எம்மில் பதித்துக்கொள்ள வேண்டும்.
- ✦ நற்செயல்களில் நாம் ஊக்கம் கொள்வோம். வெற்றிகள் பல பெற்று வாழ்வில் ஏற்றம் பெறுவோம்.

**ஆக்கம் : ம. ஜனனி, தரம் – 6**

# புனித பிரான்சிஸ் அசிசி – 16

கிளாராவும் மற்றச் சகோதரிகளைப் போலவே கடினமாக உழைத்தாள். சாப்பாட்டறையில் பணிவிடை புரிந்தாள். நோயாளிகளைக் கவனித்தாள். பிச்சை எடுத்துவந்த சகோதரிகளின் பாதங்களைக் கழுவினாள். மனத்திற்கு ஏற்காத பல வேலைகளைப் பிரியத்தோடு செய்தாள். தபசு அதிகம் ஆற்றினாள். சிறிது ரொட்டியும் தண்ணீரையுமே உண்டு வந்தாள். நோயுற்றபொழுதும் தலைக்குத் தலையணையாக மரக்கட்டைகளையே உபயோகித்து வந்தாள்.

ஒரு நாள், சில சேவகர்கள் தன்னுடைய மடத்தைச் சூழ்ந்து கொண்டனர். இவர்கள் மடங்களையும் துறவற இல்லங்களையும் அழிப்பதென்று கங்கணம் கட்டிக்கொண்டு வந்தனர். அவர்கள் கன்னியர்களைக் கொன்று மடத்தை தீக்கிரையாக்க விழைந்தனர். பின் கிளாரா, ஆண்டவரைக் கதிர்ப் பாத்திரத்தில் ஏந்தியவளாய் வாயில்முன் நின்று தங்களைக் காப்பாற்ற வேண்டுமென வேண்டிக் கொள்ள, அவர்கள் ஒன்றும் செய்யாது சென்றனர்.

பிரான்சிசைக் காட்டிலும் அநேக ஆண்டுகள் கிளாரா வாழ்ந்தாள். அவள் இறப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன் வெகுவாய் நோய்வாய்ப்பட்டாள். ஆனால் அவள் எப்பொழுதும் அன்பாகவும், அமைதியாகவும் அவைகளைப் பொறுத்துக் கொண்டாள். “நான் இயேசுவை அறிந்துகொள்ள உதவிய பிரான்சிசுக்கு நன்றி” எனக் கூறுவாள். எந்த வேதனையும் எந்த ஒறுத்தலும் தனக்குப் பெரியதில்லை என்று கூறுவாள். இயேசுவின் பாடுகளைப் படிக்கக் கேட்டு பின் தன் ஆவியை இறைவனிடம் ஒப்படைத்தாள்.

1211ஆம் ஆண்டிலும் 1212ஆம் ஆண்டிலும் பிரான்சிஸ் நகர் நகராகச் சென்று போதித்து வந்தார். சில நேரங்களில் போதனையைக் கைவிடச் சோதனை வந்தது. எப்பொழுதெல்லாம் மக்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு, “இதோ புனிதர்” என்று ஆரவாரம் செய்தனர். ஆனால் இதை பிரான்சிஸ் விரும்பவில்லை. மேலும் அவர் “பொறுங்கள் இன்னும் நன் பாவியாக மாறுவதற்கு நேரம் இருக்கிறது” என்று கூறுவார்.

தான் பெரிய பாவி என்பதை உணர்ந்து மற்றவர்களும் அதை உணர வேண்டும் என விரும்பினார். ஒரு சமயம் அவர் நோய்வாய்ப்பட்டிருக்கையில் கோழிக்கறி சாப்பிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நோய் நீங்கிய பின் தன்னை தெரு வழியே தன் கழுத்தைக் கயிற்றில் கட்டி இழுத்துச் செல்லும்படி ஒரு சகோதரனுக்கு ஆணை பிறப்பித்தார். மேலும் அவரை இழுத்துச் செல்லும்பொழுது “இதோ, போசனப் பிரியனைப் பாருங்கள், கோழி மாமிசம் உண்டவன். இவனை நீங்கள் அறியவில்லை” என்று கூறவும் ஆணையிட்டார்..

**தொடரும்**

### கேள்வி எண் 16

1) **சில சேவகர்கள் மடத்தைச் சூழ்ந்து கொண்ட போது கிளாரா என்ன செய்தார்?**
2) **பிரான்சிஸ் தான் பாவி என மக்களுக்கு உணர்த்த என்ன செய்யும் படி ஆணையிட்டார்?**

## அனுப்ப வேண்டிய கடைசி திகதி : 10.02.2014

### புனித பிரான்சிஸ் அசிசியின் தொடருக்கான விடைகளை எழுதி பாராட்டைப் பொறுபவர்கள்.

1) **அ.மதுமிகா, தரம் 8, நல்லாயன் மகளிர் மகா வித்தியாலயம், கொட்டாஞ்சேனை கொழும்பு –13.**
2) **ஜேசுதாசன் கெலிஸ்டர், தரம் – 5B, நு/சேன் போர்ட் கனிஷ்ட கல்லூரி, நாவலுயா**
3) **ஷாமினி சிமியோன், தரம் 8, திருக்குடும்ப கன்னியர் மடம், பம்பிலப்பிட்டி.**
4) **J.D. எண்ஜலினா, தரம் 7, சதாசகாய மாதா மறைப்பாடசாலை, பாரக்கடுவ (இரத்தினபுரி)**
5) **அரேத்தா விக்டோரியா, தரம் 8F திருக்குடும்ப கன்னியர் மடம், கொழும்பு – 4**

## மாணவர் ஒளி

# சம்பவங்களும் சாதனைகளும்



## நல்லதை நாமே தொடங்கலாம்

க்ளாரன் சாண்டரஸ் என்பவர் ஒரு பலசரக்குக் கடையில் எழுத்தாளராக இருந்தார். அவருக்கு ஒரு புதிய யோசனை தோன்றியது. அதாவது, கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் தங்களுக்கு வேண்டியதைத் தாங்களே தேர்வு செய்துகொள்ளும் வகையில் பல தரப்பட்ட பொருள்களை ஷெல்ப்பில் அடுக்கிவிடலாம் என்பது தான். இதை தன் முதலாளியிடம் கூறினார். ஆனால், அவர் அதை ஏற்கவில்லை. தொடர்ந்து இதை வலியுறுத்தியதால் அவரை வேலையிலிருந்து நீக்கிவிட்டார். ஆனால் சாண்டரஸ் விடாது நான்கு ஆண்டுகள் உழைத்து சம்பாதித்துக் கொண்டு “பிக்கி - விக்கி” என்ற சூப்பர் மாக்கற்றைத் திறந்தார். அதில் வாடிக்கையாளர்கள் வேண்டியதை அவர்களே தேர்வு செய்து கொள்ள வாய்ப்புத் தரப்பட்டது. பலன் வந்தது. வெகு சீக்கரமே சாண்டரஸ் பெரும் செல்வந்தரானார். “சூப்பர் மாக்கற்” என்ற வியாபாரத்துவமும் தழைத்தது

தன் மனதில் உதிக்கின்ற அனுபவ ரீதியிலான நல்ல சிந்தனையின் மீது அசையாத நம்பிக்கை ஏற்படுகின்றபோது, செயல்வேகம் அதிகரிக்கின்றது. அந்தச் செயல் புதிய சரித்திரம் கூட படைக்கலாம்.

“உங்களுக்கு உதவி தேவையா? அதை உங்களிடமே கேட்டுப் பெறுங்கள்”
- கன் ஃபூஷியஸ்

# ஒன்பது தினசரி கடமைகள்

1) மிதமாகப் பேசு
2) எவர் எது சொன்னாலும் கேட்டு சரியென்று தோன்றுவதைச் செய்
3) ஒவ்வொரு நிமிடத்தையும் வீணாக்காமல் வேலை செய்
4) ஏழை போல் வாழ், செல்வத்தில் பெருமை கொள்ளாதே
5) நீ செய்யும் செலவிற்குக் கணக்கெழுது
6) மனம் ஒன்றிக் கல்வி கற்றுக் கொள்
7) நாள் தோறும் உடற்பயிற்சி செய்
8) அளவோடு சாப்பிடு
9) நாள் தவறாமல் நாட்குறிப்பெழுது

# வெட்கம்



- நீங்கள் ஆட்சியாளர் முன்னும், வலியோர் முன்னும் பொய்யைப்பற்றி வெட்கப்படுங்கள்
- நடுவர் முன்னும், ஆளுனர் முன்னும் குற்றத்தைப் பற்றியும்,
- தோழர் முன்னும், நண்பர் முன்னும் அநீதி பற்றியும்,
- நீங்கள் வாழுகின்ற இடத்தில் திருட்டைப் பற்றியும்,
- ஆணையையும் உடன்படிக்கையையும் முறித்தல் பற்றியும்,
- கொடுக்கும் போதும், வாங்கும் போதும் மதியாமைப் பற்றியும்,
- வணக்கம் செலுத்துவோர் முன் அமைதி காத்தல் பற்றியும்,
- விலை மாதரை நோக்குவது பற்றியும்,
- உறவினரின் விண்ணப்பதைப் புறக்கணிப்பது பற்றியும்,
- அடுத்தவரின் பங்கையும், பரிசையும் பறித்துக் கொள்வது பற்றியும்
- மணமான பெண்ணை உற்றுநோக்குவது பற்றியும்,
- பணிப் பெண்ணோடு தகாத பழக்கம் வைத்திருப்பது பற்றியும்,
- நண்பர்களைத் திட்டுவது பற்றியும்,
- நண்பர்களுக்கு அன்பளிப்பு வழங்கிய பின் அவர்களை இகழ்வது பற்றியும்,
- நீங்கள் கேள்வியுற்றதைத் திருப்பிச் சொல்வது பற்றியும்,
- இரகசியங்களை வெளிப்படுத்துவது பற்றியும்



### வெட்கப்படுங்கள்

அப்போது நீங்கள் உண்மையான நாணம் கொள்வீர்கள். எல்லா மனிதரின் பரிவும் உங்களுக்குக் கிடைக்கும்.

*(சீராக்கின் ஞான நூலிலிருந்து)*

# மனிதனைப் பற்றிய சில உண்மைகள்

- ✶ இருமலின் வேகம் மணிக்கு 100 கிலோ மீற்றர்
- ✶ ஒரு சிசுவின் கையில் ரேகைகள் 3வது மாதத்திலிருந்து உருவாகின்றன.
- ✶ கை, கால்கள் நகங்களின் அடிப்பகுதியிலிருந்து அதன் மேல்பாகம் வரை வளர்வதற்கு 6 மாதங்கள் ஆகின்றன. கால் நகங்களை விட கைவிரல் நகங்கள் வேகமாக வளர்கின்றன.
- ✶ ஒரு மனிதனுக்கு சரியாக தினமும் 40 முதல் 100 தலைமுடிகள் உதிர்ந்து விடுகின்றன.
- ✶ கணணியில் சில மணி நேரங்கள் பணிபுரிந்துவிட்டு பார்வையை சில நிமிடங்கள் வெள்ளைநிற காகிதத்தில் செலுத்தினால் அந்தக் காகிதம் இளஞ்சிகப்பு நிறமாகத் தெரியும்.
- ✶ ஆண்களின் உடல் பாகத்தில் மிகவும் வளரக்கூடிய முடி தாடியில் வளரும் முடிதான். ஏனென்றால் ஒருவர் தனது வாழ்நாளில் தாடியை எடுக்காவிட்டால் அது 30 அடி நீளம் வளர்ந்துவிடும்.

# கேட்டல், கவனித்தல், கற்றல்

## சென்ற இதழின் தொடர்ச்சி

நமக்குத் தெரியும் என்ற நினைப்பு வருவதற்கு என்ன காரணம் - ஆணவமா? நிச்சயம் இல்லை. பல விஷயங்களில் இது போதும் என்ற அளவுக்கு கற்றுக்கொள்வது ஒரு காரணம். சில நேரங்களில் இதில் இவ்வளவுதான் இருக்கிறது என்று நாமே தீர்மானித்துவிடுவது மற்றொரு காரணம்.

இதில் இவ்வளவுதான் என்று நாம் தீர்மானிப்பதற்குக் காரணம் நம் முற்சாய்வுதான். (முற்சாய்வு - prejudice, சென்னைப் பல்கலைக் கழக அகராதிப்படி) இந்த விஷயத்திலே இதைப் பார்க்கலாம். prejudice என்ற வார்த்தை எனக்குத் தெரியும். அது எனக்கு பரிச்சயமானது. நிறைய பயன்படுத்தியிருக்கிறேன். இந்த விஷயத்தை எழுதும்போது prejudice பற்றி எழுதப் போகின்றேன் என்று தீர்மானித்து, இந்தக் கட்டுரையின் இந்தக் கட்டத்தில்தான் அதற்குத் தமிழில் ஒரே வார்த்தை என்ன என்ற கேள்வி என்னுள் எழுந்தது. இந்த வார்த்தைக்குப் பொருள் முன்கூட்டியே நம் எண்ணங்களை ஒரு வகையில் நிர்ணயித்துக் கொள்வது.

ரவிசாஸ்திரி வரும்போது, “இன்றைக்கு அடிச்சு கிழிச்ச மாதிரிதான்” என்று முனகுவது, நடிகை என்றவுடன் நிச்சயமாக நம்முடன் உறவாடத் தயாராக இருப்பார் என்று முடிவெடுப்பது, மருத்துவர் என்றவுடன் நிறைய பணம் இருக்கும் என்று கணிப்பது போன்றவை எல்லாமும் இவ்விதம் ஒரு விஷயத்தை முன்கூட்டியே நிர்ணயித்து விடுவது. இன்று தமிழில் எழுதும் கட்டத்தில்தான் இந்த வார்த்தைக்குத் தமிழில் என்ன என்பது எனக்குத் தெரியாது எனக்கு உறைத்தது.

தெரியும் என்பதற்கும் முழுதாய்த் தெரியும் என்பதற்கும் உள்ள வேறுபாடே இதுதான். முற்சாய்வு இருப்பதால் முழுதாய் அறிந்துகொள்வது தடைப்படுகிறது. முற்சாய்வு சரியல்ல என்பது எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் விஷயம். ஆனால் எல்லோர்க்கும் சில விஷயங்களில் முற்சாய்வு இருப்பது இயல்பு. முற்சாய்வு இரு வகைகளில் ஏற்படும். காலங்காலமாய் திரும்பத் திரும்பக் கூறப்படும் கருத்துக்களின் விளைவால் சில விஷயங்களில் நாம் இப்படித்தான் இருக்கும் என்று தீர்மானிக்கின்றோம். இன்னொரு வகையில் நாம் ஓரளவு சில விஷயங்களைத் தெரிந்துகொண்டு முடிவெடுப்பதும் முற்சாய்வுதான்!. இது கற்பதில் வரும் குறை!

கற்பதில் குறை வர கவனமின்மை காரணம். கவனமின்மைக்குக் காரணம் முற்சாய்வு. முற்சாய்வுக்குக் காரணம் முழுதாய் தெரிந்து கொள்ளாதது. முழுதாய் அரக்கர்களைப் பற்றித் தெரியாததால் லஷ்மணனுக்கு விபீஷணனைப் பார்த்தவுடன் சந்தேகம், கோபம் ஏற்பட்டது. எதையும் முழுதாய்த் தெரிந்துகொள்ளும் மனோநிலை இருந்தால் இத்தகைய அவசர உணர்ச்சிகள் வராது. அவசரமான உணர்ச்சிகளினால்தான் பார்வையில் பழுது வருகிறது. இப்படி அவசரமாக உணர்ச்சிகள் தாக்காமல் ஒவ்வொரு கட்டத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப நம் உணர்ச்சிகள் வெளிப்பட, முற்சாய்வு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு ஒரே வழி “அன்று அப்படி”, “அதில் கூறியபடி” “இதுவரை....” என்று நினைத்துக் கொண்டு ஒரு விஷயத்தை அணுகாமல் “சரி இதுவரைக்கும் நடந்ததெல்லாம் இருக்கட்டும், இப்போது....” என்றபடி ஒவ்வொரு விஷயத்தையும் அணுகவேண்டும். முற்சாய்வு இல்லாமல் முறையாய் அணுகினால் கவனம் குறையாமல் துல்லியமாய், தீர்க்கமாய் தீர்மானிப்பது சாத்தியம். இது மெல்ல வளர்க்க வேண்டிய பழக்கம்.

உஸ்பென்ஸ்கி நிச்சயமாக நிறைய விஷயங்கள் தெரிந்த மேதை. தன் சக மனிதர்களைக் காட்டிலும் அந்தக் காலகட்டத்தில் அறிவாளி. அவர் தனக்கு ஏதும் தெரியாது என்பதுபோல, குர்ஜீபிடம் போனதற்குக் காரணம் அறியாமையோ, அடக்கமோ, தாழ்வு மனப்பான்மையோ அல்ல. எதுவுமே தெரியாது என்று நினைத்தால் தாழ்வு மனப்பான்மை அல்லது அறியாமை என்று நாம் முடிவெடுப்பதும் முற்சாய்வினால்தான். எதில் எவ்வளவு தெரியும் என்று சிந்திக்கும்போதுதான் அதில் எவ்வளவு தெரியாது என்பது மனதுக்குப் புரியும்.

“கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு” என்று கூறுவது அடக்கத்தினால் அல்ல, அது சத்தியமான உண்மை. கணணியில் Dos, Basic தெரிந்து கொண்டு கணணி கற்றுக்கொண்டதாய் நினைத்தால் போதும் அளவு ஓரளவேயாகும். c.UNIX என்று நாளும் புதுப்புது விஷயங்கள் கற்றுக் கொள்ள இருக்கின்றன என்று தெளிவோடு இருந்தால் மேலும் வளர இந்த எண்ணம் உதவும்

“ஐயோ எனக்கு இவ்வளவுதான் தெரியும்...” என்பதற்கும், “எனக்கு இன்னும் தெரிந்துகொள்ள எவ்வளவோ இருக்கிறது” என்பதற்கும் வித்தியாசமுண்டு. தெரியாதவற்றை நமக்கு நாமே ஒப்புக்கொள்வது சோர்வடைய அல்ல, மேலும் கற்றுக்கொள்ளவே என்ற வகையில் அணுக வேண்டும். இதுதான் தாழ்வு மனப்பான்மை வராமல் தடுக்க வழி...

கற்றுக்கொள்ள வேண்டியவை என்று ஒரு பட்டியல் தயாரித்தால் அதற்கு முடிவே கிடையாது. இதற்காக சுசீலாபோல, எஸ்.பி.பி போல பாடவேண்டும் என்றெல்லாம் பட்டியலில் இருந்தால் அது அர்த்தமற்றதாகிவிடும். இதற்கு அடிப்படையாய் எது தேவை என்றும், எதற்கு தேவை என்றும் நம்முள் தீர்மானமாய் இருக்க வேண்டும். தீர்மானம் இல்லாமல் அலைபாயும் மனத்தோடு கவனம் செலுத்துவது முடியாது.

தொடரும்



02

## ஆலய வரலாறுகள்

# மெஜுகொரி அன்னை

மெஜுகொரி என்ற கிராமம். ஐரோப்பாவின் தென்கிழக்குப் பகுதியில் இருக்கும் போஸ்னியா - ஹெர்ஸ்கோவினா என்ற கம்யூனிச நாட்டில் அமைந்துள்ளது. சராஜிவோ என்பதே இந்நாட்டின் தலைநகர். போஸ்னியா - ஹெர்ஸ்கோவினா நாட்டின் தென்மேற்குப் பகுதியில் மலைகளின் மத்தியில் இருக்கும் கிராமங்களுள் ஒன்றுதான் மெஜுகொரி. இக்கிராமத்தில் உள்ள மக்கள் விவசாயத் தொழில் செய்பவர்கள்.

13ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்பே இங்கு கிறிஸ்தவம் வேரூன்றியது. மெஜுகொரி பங்கானது 1892இல் உருவாக்கப்பட்டு திருத்தூதர் யாக்கோபுவுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. "மெஜுகொரி" என்ற சொல்லுக்கு இரண்டு மலைகளுக்கு இடையில் இருக்கும் நிலப்பரப்பு என்பது பொருள்.

இவான்கா, மரியானா, விஷ்கா, இவான், மரியா, யாக்கவ் என்ற ஆறு குழந்தைகளுக்கு மாதா காட்சி கொடுத்தார். மரியானாவைத் தவிர குழந்தைகள் அனைவரும் மெஜுகொரி உள்ளிட்ட ஐந்து குக்கிராமங்களில் ஒன்றான பியாகோவிட்சி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள். மரியானா மட்டும் சராஜிவோ நகரில் படித்துக் கொண்டிருந்தார்.

விடுமுறையின்போது மெஜுகொரியில் உள்ள தன் பாட்டி வீட்டிங்கு அவர் வருவது வழக்கம். அவரும் மாதாவைக் காட்சியில் கண்டார். மெஜுகொரி கிராமத்தில் மாதா காட்சி கொடுத்த 4 சிறுமிகளும், 2 சிறுவர்களும் சாதாரணமானவர்கள். அதீத பக்தி கொண்டவர்கள் அல்ல, முதன் முதலில் மாதாவைக் கண்ட சிறுமி இவான்கா ஆவார். தன் வீட்டிற்கு அருகே நின்று கொண்டிருக்கும்போது பக்கத்தில் உள்ள சாலைக்கு அருகே இருந்த சிறு மலையில் 1981ஆம் ஆண்டு ஆனி மாதம் 24ஆம் திகதி மாதா காட்சி கொடுத்தார். இவான்கோ 1966ஆம் ஆண்டு சித்திரை மாதம் 21ஆம் திகதி பிறந்தார். மாதா காட்சி கொடுக்கும்போது அவருக்கு வயது 15. பலர் புலம் பெயர்ந்து ஜெர்மனி நாட்டில் வாழ்ந்தனர். இவான்காவின் தந்தையும் வேலை நிமித்தமாக ஜெர்மனியில் இருந்தார்.



1981ஆம் ஆண்டு மாதா காட்சி தருவதற்கு முன்பாக இவான்காவின் தாய் இறந்து போனார். மாதா காட்சி கொடுத்த சில ஆண்டுகளில் தன் தாயிடம் 5முறை பேசும் அருளை இறைவன் இவான்காவுக்கு கொடுத்தார்.

மெஜுகொரி காட்சிகளைப் பற்றி அதிக நூல்களை எழுதிய அருட்தந்தை லொரண்டைன் காட்சியில் மாதாவைக் கண்ட விஷ்கா, இவான்கா, மரியானாவைப் பார்த்து "ஏன் மாதா உங்களுக்குக் காட்சி கொடுத்தார்?" என்று கேட்டபொழுது, இவான்கா கூறினார் "எப்போதும் மாதா சிறந்த மனிதர்களுக்குத்தான் காட்சி தரவேண்டும் என்று அவசியம் இல்லையே!"

1981ஆம் ஆண்டு ஆனி மாதம் 24ஆம் திகதி



மாலை 6.15 மணிக்கு இவான்காவும், மரியானாவும் பக்கத்தில் இருக்கின்ற மலைக்கு சென்றனர். திடீரென மிகப் பிரகாசமான ஒளி வெள்ளம் தோன்றுவதையும், அந்த ஒளியைப் பின்புலமாகக் கொண்டு ஒரு பெண்ணின் உருவம் தோன்றுவதையும் முதன் முதலில் இவான்கா பார்த்தார். அதைத் தொடர்ந்து மரியானாவும் மாதாவைக் கண்டார். இருவரும் பயந்து நடுங்கி ஊருக்குள் ஓடி வந்தனர். பக்கத்து நகரான மோஸ்தர் என்ற நகரில் இருந்த விஷ்காவை அழைத்துக் கொண்டு மலையை அடைந்தனர்.

இவான்கா, மரியானா, விஷ்கா, இவான் மற்றும் மில்கா அனைவரும் ஒன்று சேர்ந்தனர். அவர்கள் எல்லோராலும் மாதாவைக் காண முடிந்தது. அவர்கள் மாதாவைத் தொட்டுப் பேசினார்கள். அவர்கள் கண்ட காட்சியை ஊர் மக்கள் முதலில் நம்பவில்லை. ஆனி 25, 1981 அன்று இவான்கா, மரியானா, விஷ்கா, இவான், மில்கா, யாக்கவ் மற்றும் இரண்டு பெரியவர்கள் மலைக்குச் சென்றார்கள். அவர்கள் அவ்விடம் சென்றவுடன் மாதா அவர்களுக்காகக் காத்துக் கொண்டு நின்றார். மாதாவைக் கண்டு மகிழ்ச்சி கொண்டனர். மாதாவைப் பார்த்துக் கொண்டே செபித்தனர். காட்சிக்காக குழந்தைகள் அழைத்துப் போன பெரியவர்களால் ஒன்றையும் காண இயலவில்லை. மக்கள் பலர் குழந்தைகள் மலைக்கு சென்றதையும், ஒளி வெள்ளத்தையும் கண்டனர். காட்சிக்குப்பின் குழந்தைகள் மகிழ்ச்சியோடு கீழே இறங்கி வந்தார்கள். அதுமுதல் குழந்தைகள் ஆறு பேரும் தினமும் மாதாவின் காட்சியைக் கண்டார்கள்.

மாதா எப்போதும் ஒரு பணியாளைப் போலவும், தூதுவர் போலவுமே தன்னை வெளிப்படுத்துகிறார். அவர் தரும் செய்திகள் எதுவும் புதிய செய்திகள் அல்ல, ஆனால் அவை இன்றும் மனிதர்களுக்குத் தேவையான செய்திகள் மாதாவின் செய்திகள் இன்னொரு நற்செய்தி அல்ல "நாங்கள் உங்களுக்கு அறிவித்த நற்செய்தியினின்று மாறுபட்ட ஒன்றை நாங்களோ, விண்ணிலிருந்து வந்த தூதரோ, யார் அறிவித்தாலும் அவர்கள் சபிக்கப்படுக" (கலா 1:8) ஆகவே மாதாவின் செய்திகள் அனைத்தும் நற்செய்தியின் எதிரொலிப்பே.

நற்செய்தியின் உள்ளடக்கமாகவும், திருச்சபையின் எதிரொலிப்பாகவுமே மாதாவின் செய்திகள் இருக்கின்றன. பாத்திமாவைப் போலவே மெஜுகொரியிலும் உலக அமைதியும், உலகத்தின் பாதுகாப்புமே மாதாவின் மையச் செய்திகளாக இருக்கின்றன.

கடந்த 30 ஆண்டுகளாக இங்கே அன்னையின் அருளுதவியைத் தேடி பலர் வருகின்றனர். பலர் மனமாற்றம் பெறுகின்றனர். புதுவாழ்வு வாழ்கின்றனர். விஷ்கா கூறுகையில் "முன்பெல்லாம் நான் வழக்கத்திற்காகச் செபித்தேன். இப்பொழுது ஈடுபாட்டுடன் செபிக்கின்றேன். கடவுள் மீது விசுவாசம் கொள்ளாதவர்களைக் குறித்து நான் பரிதாபப்படுகிறேன். ஏனெனில் யாரும் இறையருளைப் பெறாமல் தொலைந்து போகக்கூடாது என அன்னை விரும்புகிறாள்.

இறைவனிடம் செல்ல நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும். இங்கே மகத்தானக் காரியங்கள் நடைபெறுகின்றன. நம் தேவ அன்னை நம் மத்தியில் இருக்கின்றார். இங்கே வரும் அனைவரும் இறையன்பின் நெருக்கத்தை அறிந்து கொள்கின்றனர்.

தாய் திருச்சபை இன்னும் இந்த காட்சிகளை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஆயினும் மக்கள் அங்கு சென்று செபிக்கவும், இறையருள் பெறவும் தடை எதுவும் விதிக்கவில்லை. ஆயிரக்கணக்கான மக்கள் இத்திருத்தலம் சென்று நல்வாழ்வு பெறுகின்றனர்.

அமைதி, நம்பிக்கை, செபம், நோன்பு, மனமாற்றம், அன்பு, புனிதம் - ஆகிய காரியங்களைக் குறித்தே இன்றும் அன்னை அறிவுறுத்துகிறார். தேவ அன்னை தமது காட்சிகளின் வாயிலாக மக்களை தம் மகனிடம் கொண்டு வந்து சேர்க்கிறார்.

**வரலாறு தொடரும்...**

# எழில் மிகு இலங்கை அன்னை

இலங்கைத் திருநாட்டின் சுதந்திர தினமான மாசி 4ஆம் திகதியே இலங்கை நாயகி திருவிழாவாக சிறப்பிப்பது வழக்கம். மேலும் ஒவ்வொரு ஆவணி மாதமும் இறுதி ஞாயிறன்று நோயாளரை ஆசீர்வதிக்கும் மாபெரும் தினம் தேசிய மட்டத்தில் தேவத்தையில் கொண்டாடப்படுவதும் பங்குனி முதல் சனியன்று உயர் மறைமாவட்ட சிறுவர் தினம் சிறப்பிக்கப்படுவதும் யாம் அறிந்ததே. மேலும் இலங்கை அன்னையின் திருச்சுருபத்தை கர்தினால் குரே ஆண்டகை மிகுந்த அவதானத்துடன் செய்யப் பிரயாசப்பட்டார்.

இலங்கையின் தேசிய மலரான "நா" மலரை மாதாவின் பாதத்தில் அழகுற வைத்து, அதற்கான அனுமதியை 1951ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20ஆம் திகதி பெற்றுக் கொண்டதன் பின்னர் பாத்திமாவைச் சார்ந்த தெடிம் எனும் சிற்பியினால் செதுக்கப்பட்டு 1952ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 5ஆம் திகதி திருத்தந்தை 12ஆம் பாப்பரசரால் உரோமபுரியில் வைத்து ஆசீர்வதிக்கப்பட்டது.

மூன்று நாட்களுக்குப் பின் அதைப் பெற்றுக் கொண்ட லிஸ்பன் நகர்க் கர்தினால் செரிகொய்ரா ஆண்டகை கோவையை நோக்கி பயணித்த வேளையில் "என் எம் - இந்தியா" எனும் கப்பலில் அச்சுருபத்தை அங்கு கொண்டு வந்தார். 1952ஆம் ஆண்டு மார்கழி மாதம் 6ஆம் திகதி கோவை புனித பேதுரு தேவாலயத்தில் வைத்து கர்தினால் செரிகொய்ராவிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

கோவையிலிருந்து இலங்கை மாதாவின் திருச்சுருபம், "சபீனா - ஏ - அரப்" எனும் கப்பலில் 1952ஆம் ஆண்டு மார்கழி 11ஆம் திகதி இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. கொழும்புத் துறைமுகத்தை அடைந்த போது அப்போதைய பிரதமரான சேர் ஜோன் கொத்தலாவல அவர்கள் அரச பிரதிநிதியாக பங்கு பற்றியிருந்தார். அன்றே ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டு கொழும்பு கொட்டாஞ்சேனை ஆசனக் கோயிலில் வைக்கப்பட்டது. அடுத்த நாளான 12ஆம் திகதியே அப்போதைய திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு இக்னேசியஸ் க்ளேனி ஆண்டகையால் தேவத்தையில் ஸ்தாபிக்கப்பட்டது.





# மரியாள் முதல் நற்கருணை பேழை



அருட்சகோதரி. யோகா scjm
இரத்தினபுரி

மரியாள், இறைமகன் இயேசு கிறிஸ்துவின் அன்னை, தூய ஆவியின் ஆலயம், இறைவன் மனிதனாக தன்னையே கொடுத்தவள், மாசற்றவள், தூய வளனாரின் பத்தினி, கன்னியருக்குள் கன்னிகை என்றெல்லாம் போற்றப்படும் தேவ தாய், வாழும் நற்கருணை பேழையாக இருந்தாள் என்றால் அது மிகையாகாது. புனிதர்களான ஆனாளுக்கும் ஜோக்கீனுக்கும் மகளாக பிறந்த மரியாள், இறைவனின் மீட்புத் திட்டத்தில் ஓர் பாரிய பங்காற்ற வேண்டியிருப்பதை அறியும் எல்லாம் வல்ல இறைவன், தன் மகளாம் மரியாவை தகுந்த முறையில் மிக அழகாக, அற்புதமாக தயார்படுத்துகிறார்.

அரசியல், பொருளாதார, சமய, சமூக, கலாச்சார, பண்பாட்டு அடிமைத்தனத்திற்குள் சிக்குண்டு, குறிப்பாக அரசியல் ரீதியான ஒரு விடுதலையை நோக்கிக் காத்திருந்த தனது தேர்ந்தெடுக்கப்பட்ட இனமான யூத மக்களுக்கு, பாவத்தளையை நீக்கும் ஓர் விடுதலை வாழ்வை தகுந்த தருணத்தில் தரச் சித்தமானார். ஆகவேதான், இஸ்ராயேல் மக்களின் தந்தையர்களான ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு போன்றவர்களுக்கும் அவர்களைப் பின் தொடர்ந்து வந்த மோசே, நீதித் தலைவர்கள், அரசர்கள், இறைவாக்கினருக்கு வாக்களித்தபடியே, காலம் கனிந்த பொழுது (எபிரேயர் 1:1-2) மீட்பராம் தன் மகன் கிறிஸ்துவை கன்னியிடம் பிறந்தவராக இவ்வுலகிற்கு அனுப்பினார்.

வாக்களிக்கப்பட்ட மெசியா மண்ணுலகம் வந்து (யோவான் 1:1-5) மனுக்குலத்தை மீட்க ஏதுவாக மரியாளை தயார்படுத்திய வானகத் தந்தை, காலம் நிறைவேறிய போது, (எபிரேயர் 1:1-2) தன் தூதனை கலிலேயாவிலுள்ள நசரேத்துக்கு அனுப்புகின்றார். (லூக்கா 1:26-29) படைப்பனைத்தும் தனக்கே உரித்தானது எனினும், மனிதனைச் சுதந்திரமாக படைத்த இறைவன், தனது வருகைக்காக மரியாளின் சம்மதத்தை கேட்டு நின்றார். தேவதூதன் உரைத்தவை கேட்டு மரியாள் கலங்கியிருப்பினும் ஆண்டவன் வார்த்தைக்கு **"ஆம்"** (லூக்கா 1:31) எனப் பதில் கொடுத்து, இறைவனைத் தாங்கும் தாயாக, முதல் நற்கருணைப் பேழையாக மாறுகின்றாள். (லூக்கா 1:39-45)

அப்ப வடிவில் தன்னைத் தாழ்த்தி, இரவும் பகலும் மனிதருக்காகப் பரிகாரம் செலுத்தும் இறைமகன் கிறிஸ்து மனுவாக உதிக்க, மரியின் உதரத்தில் உருவான தருணத்திலிருந்து மரியாள் முதல் நற்கருணைப் பேழையானாள். இறைவனது திருவார்த்தையை தன் வயிற்றில் சுமந்தவளாக மரியாள் தன் உறவினள் எலிசபெத்திற்கு பணிவிடைபுரிய போனபோது எலிசபெத் (லூக்கா 1:39-45), இறைவனின் அன்னையை (க.தி.ம 466,495), நடமாடும் நற்கருணைப் பேழையை வாழ்த்தி வரவேற்கின்றாள். அன்றே இயேசுவை மனிதரிடையே எடுத்துச் செல்பவளாக, அவரது திவ்ய பிரசன்னத்தை உணர்த்துபவளாக மரியாள் வாழ்ந்தாள் என்பது வெள்ளிடை மலை. மரியாள் எங்கெல்லாம் சென்றாளோ, யாருக்கெல்லாம் உதவக் கரம் கொடுத்தாளோ, அவர்கள் நடுவே எல்லாம் இயேசு பவனியாக எடுத்து செல்லப்பட்டிருக்கின்றாள்.

**"தபர்னாக்கள்"** எனப்படும் நற்கருணைப் பேழையானது, எபிரேய மொழியில் **"சிறு வீடு"** என பொருள்படும். பிற்பட்ட காலத்தில் திருச்சபை இச்சொல்லை உள்வாங்கி ஆண்டவருடைய திரு உடலைக் களஞ்சியப்படுத்தும் நற்கருணைப் பேழையாக அறிமுகப்படுத்தியது. மரியாள் ஓர் சாதாரண குடும்பத்தில் பிறந்த யூத பெண். யூதரிடையே **"சிறு வீடு"** என்கின்ற போது, ஒரு சிறிய அறை **"பகலில் விருந்தினரை வரவேற்கவும் இரவில் தம் பொருட்களை களஞ்சியப்படுத்தவும் பயன்படுத்துவர், ஒரு சமையலறை"** உணவு தயாரிக்க, வரவேற்பு கூடம், வீட்டோடு சேர்ந்தாற்போல் தமது கால்நடைகளை கட்ட ஒரு தொழுவம். இவ்வாறான ஒரு வீட்டை எபிரேயத்தில் **"தபர்னாக்கள்"** என அழைப்பர். இவ்வாறான ஒரு சிறு வீட்டில் மரியாள் யோசேப்பு இயேசு ஆகியோர் வாழ்ந்தனர். இச்சிறு வீட்டில் வாழ்ந்த இந்த மூவருக்குள்ளும் இருந்திருக்கக் கூடிய தொடர்பு, உறவு மிக நெருக்கமானதாக, ஆழமானதாக இருந்திருக்க வேண்டும். மரியாள் தனது சிறு வீட்டில் தனது பக்தாவான சூசையுடனும், தன் மகன் இயேசுவுடனும் எவ்வாறு நெருக்கமாக, அர்ப்பணிப்புடன் வாழ்ந்தாரோ அதே போல இயேசுவை தன் கருவில் சுமந்த போது தன் தந்தையாம் இறைவனுடனும் உயிரளிக்கும் தூய ஆவியுடனும், மனுவுருவாக தன் கருவில் உருவான வார்த்தையானவருடனும் மிக நெருங்கிய உறவை பேணியிருந்தார் என்பது தெளிவு. இதனால்தான் வார்த்தையானவரை தன் **"தபர்னாக்களில்"** **"சிறு வீடாகிய"** தன் உதரத்தில் வரவேற்றிருந்தார். வார்த்தையான இயேசுவிற்கு உருக்கொடுக்க தன் தசையையும் இரத்தத்தையும் கொடுத்தார். இறைமகன் மரியிடமிருந்து மனுவானார். ஆகவே இவர்கள் இருவருக்கும் இடையே ஆழமான உறவு, அன்பின் பிணைப்பு இருக்கின்றது. இதனால்தான் மரியாள் முதல் தபர்னாக்களாக திகழ்கின்றாள்- தூய தமதிரித்துவத்தின் வாசஸ்தளமாக, பரிசுத்த ஆலயமாக, **"சிறு வீடாக"** மரியாள் திகழ்ந்தாள். அதனால்தான், வார்த்தை மனுவுருவாக தன் உதரத்தை **"ஆம்"** எனக்கொடுத்தாள். இதனால் வாழும் நற்கருணைப் பேழையாக மரியாள் திகழ்கிறாள்.

வார்த்தையானவர் மனுவுருவாக, மரியாள் தன் சதையை பரிசளிக்க மனுமகன் மனுவாகிறார். நற்கருணைப் பேழையில் சதையும் இரத்தமுமாக இருக்கும், கிறிஸ்து, முதன் முதலில் எழுந்தேற்றம் செய்யப்பட்டது, மரியாளின் திருவயிற்றில். ஆகவே, மரியாள் வாழும் அல்லது நடமாடும் முதல் நற்கருணைப் பேழையானாள். இதனால், நாசரேத்தில் எங்கெல்லாம் சென்றாளோ, யாரையெல்லாம் சந்தித்தாளோ, அவர்களுக்கெல்லாம், திவ்விய நற்கருணையாம் இயேசுவை ஏந்திச் சென்றாள்.

இன்றும் கூட, மரியாள் திருச்சபையின் தாயாக, தன் மகனை பின்தொடரும் இறைமக்களின் வழிகாட்டியாக, பரிந்துரையாளராக இருக்கின்றாள். இந்த பரிசுத்த மரியாள், தன் மக்களுக்கு காட்சி கொடுக்கின்ற போதெல்லாம், கிறிஸ்துவை தாங்கிவரும், தபர்னாகிளாக நற்கருணைப் பேழையாக எம்மத்தியில் வலம் வருகிறாள் என்பது மறுக்க முடியாத பேருண்மை. மரியாள், இறைவார்த்தையை தன்னில் ஏற்று விசுவசித்து மீட்புத்திட்டத்தில் பங்குபற்றியது போல், நாமும் இன்று எமது வாழ்வாலும் வார்த்தையாலும் கிறிஸ்துவாம் நற்கருணைநாதரை ஏழை எளியோர் மத்தியில் கொண்டு செல்வோம். பிறர் வாழ நாமும் எம் வாழ்வால் வாழ்வளிப்போம்.

# தமிழை சர்வதேசமயப்படுத்தியதில் தனிநாயகம் அடிகளாரின் பங்களிப்பு தனித்துவமானது

## - வவுனியாவில் தமிழ் நேசன் அடிகளார்







தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப்பணி தமிழ் உலகின் எல்லைகளைக் கடந்தது; உலகின் ஐந்து கண்டங்களையும் தளமாகக்கொண்டு; உலகம் தழுவியது. தமிழ் மொழியை சர்வதேசமயப்படுத்துவதில் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் பங்களிப்பு தனித்துவமானது; தன்னிகரில்லாதது என அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் குறிப்பிட்டார்.

கடந்த ஜனவரி மாதம் 15ஆம் திகதி வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் பதினாறாண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு தனிநாயகம் அடிகளார் நினைவுச் சொற்பொழிவு ஆற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையமான கலையருவி நிறுவனத்தின் இயக்குனரும், மன்னார் தமிழ்ச் சங்கம் மற்றும் மன்னார் சர்வமதப் பேரவையின் தலைவரும், "மன்னா" என்ற கத்தோலிக்க பத்திரிகையின் ஆசிரியருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது: தனிநாயகம் அடிகளாரைப்போனறு அல்லது அவரைவிட மேலாகத் தமிழ் அறிந்த பண்டிதர்கள், புலவர்கள், தமிழ் அறிஞர்கள் ஐம்பதுகளின் இறுதியில், அறுபதுகளின் தொடக்கத்தில் இந்தியாவிலும் இருந்துள்ளனர். இலங்கையிலும் இருந்துள்ளனர். தமிழறிந்த இந்தப் புலவர்கள், பண்டிதர்கள், அறிஞர்களில் இருந்து என்ன அடிப்படையில் தனிநாயகம் அடிகளார் வேறுபட்டு நிற்கின்றார் அல்லது தனித்துவமானவராக விளங்குகிறார் என்று நாம் சிந்திக்க வேண்டும். இந்தப் புலவர்கள் பண்டிதர்கள் தமிழ் அறிஞர்கள் எல்லாம் தமக்குள்தாமே தமிழின் பெருமையைச்சொல்லி சொல்லி மகிழ்ந்திருந்தனர். "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த குடி எங்கள் குடி"என்று தமிழரின் பழம்பெருமைகளைச் சொல்லி புளகாங்கிதம் அடைந்தனர். ஆனால் தனிநாயகம் அடிகளார் பாரதியாரின் கனவை நனவாக்கினார். "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்", "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை. திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் கனவை அவர் நனவாக்கினார். ஆம், தமிழை சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச் சென்றார். உலகப்பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழியின் சிறப்பைக்குறித்து விரிவுரைகள் ஆற்றினார். ஐக்கிய அமெரிக்க நாட்டுப் பல்கலைக்கழகங்களில் ஒரு வருடத்தில் மட்டும் இருநூறு விரிவுரைகளை வழங்கியிருக்கின்றார்.

தனிநாயகம் அடிகளார் தமிழை உலக வரைபடத்தில் பொறித்தவர் என்றும், கடந்த ஆயிரம் ஆண்டுகளில் அவரைப்போல் தமிழ்ப்பணி புரிந்தவர்கள் வேறு யாரும் இல்லை என்றும் அறிஞர் பெருமக்கள் அடிகளாரைக் குறித்துக் கூறிய வார்த்தைகள் மிகைப்படுத்தப்பட்ட வார்த்தைகள் அல்ல. "தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை" என்ற பாவேந்தர் பாரதிதாசனின் வார்த்தைகளின்படி தமிழ் உள்ளளவும் தனிநாயகம் அடிகளாரின் பெயரும் வாழும்.




# ஏறத்தாழ 1200 ஆண்டுகளுக்கு முன்னரே சீனாவில் கிறிஸ்தவம் இருந்துள்ளது

சீனாவில் 1200 ஆண்டுகளுக்கு முன்னரே கிறிஸ்தவம் பரவியிருந்ததற்கானச் சான்றுகள் அண்மை ஆய்வு ஒன்றின் மூலம் தெரிய வந்துள்ளது. சிலுவை செதுக்கப்பட்ட கல் ஒன்றினால் மூடப்பட்ட பகுதியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புகளும் சாம்பலும், 1200 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த கிறிஸ்தவர்களின் கல்லறைப்பகுதியைச் சேர்ந்தவை என அறிவிக்கப்பட்டுள்ளது. சீனாவின் ஹெனான் மத்திய மாநிலத்தைச் சேர்ந்த குகைகளில் இச்சிலுவை அடையாளமும் எலும்புகளும் 2009ஆம் ஆண்டிலேயே கண்டுபிடிக்கப்பட்டபோதிலும் அதனைத் தொடர்ந்த ஆய்வு முடிவுகள் தற்போதே வெளியிடப்பட்டுள்ளன. இதன் தொன்மை குறித்த சரியான கால அளவு அறிவிக்கப்படவில்லையெனினும், சீனாவில் கி.பி 316க்கும், 907க்கும் இடைப்பட்ட காலத்தில் மிங்க் மற்றும் டாங்க் அரசப் பரம்பரையின் காலத்தைச் சார்ந்தவை இவை என்பது தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. சீனாவில் தாவோயிசம் மற்றும் புத்தமதம் குறித்த பல்வேறு தொன்மையான



ஆதாரங்கள் கிட்டியுள்ளபோதிலும், கிறிஸ்தவம் ஏறத்தாழ 1200 ஆண்டுகளுக்கு முன்னரே அந்நாட்டில் இருந்தது என்பதற்கான ஆதாரங்கள் கிட்டியுள்ளது.

# இந்தியாவில் முதன்முறையாக, தேசிய கிறிஸ்தவ பெண்கள் இயக்கம்



இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கப் போதனைகளின் அடிப்படையில் இந்திய பெண் துறவிகள் அமைப்பு, தேசிய கிறிஸ்தவ பெண்கள் இயக்கம் என்ற ஓர் அமைப்பை முதன்மையாக உருவாக்கியுள்ளது. இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கமும், பெண்கள் மீதான அதன் தாக்கமும் என்ற தலைப்பில் பெங்களூரில் நடந்த நான்கு நாள் கருத்தரங்கின் இறுதியில் தேசிய கிறிஸ்தவ பெண்கள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தியாவில் தேசிய அளவில் கிறிஸ்தவ பெண்கள், ஏழைகள், மற்றும் ஓரங்கட்டப்பட்ட மக்கள் சார்பாக இவ்வியக்கம் செயல்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மத்திய கிழக்கிலிருந்து கிறிஸ்தவர்கள் வெளியேறுவது குறித்து திருப்பீடம் கவலை

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக, தங்களின் தாயகமாகக் கொண்டிருந்த மத்திய கிழக்கு நாடுகளைவிட்டு கிறிஸ்தவர்கள் வெளியேறிவருவது திருச்சபைக்கு மிகுந்த கவலை தருகின்றது என, வத்திக்கான் உயர் அதிகாரி ஒருவர் ஐ.நாவில் கூறினார். பாலஸ்தீனியப் பிரச்சினை உட்பட மத்திய கிழக்கில் மக்களின் நிலை என்ற தலைப்பில் ஐ.நா பாதுகாப்பு அவையில் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய, ஐ.நாவுக்கான திருச்சபையின் நிரந்தரப் பார்வையாளர் பேராயர் பிரான்சிஸ் சுள்ளிக்காட் இவ்வாறு கூறினார்.

மத்திய கிழக்குப் பகுதியில் அடிப்படைவாத மற்றும் தீவிரவாதச் சக்திகள் அடிக்கடி கிறிஸ்தவர்களைக் குறிவைத்து தாக்குகின்றன என்றுரைத்த பேராயர் சுள்ளிக்காட், அப்பகுதியில் புதியதொரு புரிந்துகொள்ளுதலையும், ஒருவர் ஒருவர் மீதான நம்பிக்கையையும் ஏற்படுத்த அனைத்து மதத்தினரும் எடுக்கும் முயற்சிகளுக்குத் திருப்பீடம் ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

# திருப்பீடப்பேச்சாளருக்கு 2013ஆம் ஆண்டின் Bravo விருது

மாசி மாதம் 03ஆம் திகதி முதல் 5ஆம் திகதிவரை இஸ்பெயினின் மத்ரித்தில் இஸ்பானிய ஆயர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சமூகத் தொடர்பாளர்கள் கருத்தரங்களில் திருப்பீடத்தின் அதிகாரப்பூர்வ பேச்சாளரும் இயேசுசபை அருள் பணியாளருமான ஃபெத்ரிக்கோ லொம்பார்த்தி அவர்களுக்கு விருது ஒன்று வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவரும் இக்கருத்தரங்கில் உரையாற்ற உள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மறைமாவட்ட சமூகத் தொடர்புப்பணியாளர்கள், தங்கள் அனுபவங்களை ஒருவர் ஒருவருடன் பகிர்ந்துகொள்ளவும், பொதுத்திட்டங்களில் ஒத்துழைப்பு வழங்கவும் உதவும் நோக்கில் இஸ்பானிய ஆயர்களால் ஏற்பாடுச் செய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்கு, மறைமாவட்ட அதிகாரப்பூர்வப் பேச்சாளர்களின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்த உள்ளது. அதன் ஒரு பகுதியாக, திருப்பீடப் பேச்சாளர், இயேசு சபை அருட்தந்தை



லொம்பார்தி விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

# பசியை போக்க







## திருத்தந்தை பிரான்சிஸ் வீணாக்கப்படும்

### உணவு, உலகின் பசியைப் போக்கப் போதுமானது

இன்றைய உலகில் வீணாக்கப்படும் உணவு, உலகில் பசியால் வாடும் எல்லாருக்கும் உணவளிக்கப் போதுமானது. குப்பைகளில் பொருள்களைச் சேகரிக்கும் ஏழைகளுக்கென வெளியிட்டுள்ள செய்தி ஒன்றில் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ் உலகின் பல நகரங்களில் குப்பைமேடுகளில் பொருள்களைப் பொறுக்கி அவற்றிலிருந்து வாழ்க்கை நடத்தும் மக்களை நினைத்து ஏழை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு கேட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தென் அமெரிக்க நாடான அர்ஜென்டினாவை மையமாகக் கொண்டு செயல்படும், ஒதுக்கப்பட்ட பணியாளர் இயக்கம் என்ற அமைப்பினர் நடத்திய கருத்தரங்கிற்கென அனுப்பியுள்ள செய்தியில் திருத்தந்தை பிரான்சிஸ் வீணாக்கப்படும் உணவு, உலகின் பசியைப் போக்கப் போதுமானது பொருள்களை மட்டுமல்ல, மனிதரையும் எளிதாகக் தூக்கி எறியும் ஒரு கலாச்சாரத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம், இவ்வுலகில் வீணாக்கப்படும் உணவு, உலகில் பசியால் வாடும் அனைவரின் பசியை அகற்றுவதற்குப் போதுமானது எனக் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## உலகில் பசியைப் போக்குவதற்கு மக்கள் அனைவருக்கும் அழைப்பு

உணவுப் பொருள்களை வீணாக்குவதையும், உலகின் வளங்களைப் பொறுப்பற்றுப் பயன்படுத்துவதையும் கைவிட்டு, பசி எனும் இழிவைப் போக்குவதற்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுமாறு கேட்டுக்கொண்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

உலகில் பசியை அகற்றுவதற்கு உலகளாவிய நடவடிக்கையையும் செபத்தையும் அனைத்துலக கரித்தாஸ் நிறுவனம் சாமோவோ தீவில் தொடங்கியுள்ளதையொட்டி ஒலி - ஒளிச் செய்தி வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ், “ஒரே மனிதக் குடும்பம், அனைவருக்கும் உணவு” என்ற இந்த முயற்சிக்குத் தனது ஆசீரையும் வழங்கியுள்ளார்.

ஒவ்வொருவருக்கும் உணவளிக்கப் போதுமான உணவு உலகில் இருக்கின்றது என்றும் கூறிய திருத்தந்தை, போதுமான உணவைப் பெறுவதற்கு ஒவ்வொருவருக்கும் கடவுள் அளித்துள்ள உரிமைகள் உள்ளன என்பதை மதிப்பதற்கு மனது இருந்தால் மட்டுமே உலகில் பசியை அகற்ற முடியும் என்று கூறியுள்ளார். இன்று உலகில் ஏறக்குறைய நூறு கோடிப் பேர் பசியால் துன்புறுகின்றனர் என்றும், இப்படி ஒருநிலை காணப்படவில்லை என்பதுபோல் நாம் பாசாங்குடன் வாழ்ந்து கொண்டிக்கக் கூடாது என்றும் கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ், பசியால் துன்புறும் அனைவருக்காகவும் ஒரே குடும்பமாக இணைந்து குரல் கொடுப்போம் எனக் கேட்டுள்ளார்.

அனைவருக்கும் உணவு கிடைப்பதற்கான உரிமை, அனைத்துலக மனித உரிமைகள் அறிவிப்பில் ஒன்றாக இருக்கும்வேளை, “அனைவருக்கும் உணவு” என்ற இம்முயற்சி, அனைத்துலக மனித உரிமைகள் தினமாக மார்கழி 10 அன்று தொடங்கப்பட்டுள்ளது.

## குடும்ப உணர்வு நம்மிடையே குறைவதே உலகில் நிலவும் பசிக்கு முதல் காரணம் - கர்தினால் பீட்டர் டர்சன்

பசியையும், பட்டினியையும் ஒழிப்பதே நமது குறிக்கோள், பசித்திருப்போரை ஒழிப்பது அல்ல என்று வத்திக்கான் உயர் அதிகாரி ஒருவர் கூறினார். மார்கழி 10, அன்று உரோம் நகரில் அனைத்துலக கரித்தாஸ் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த ஒரு கருத்தரங்கிற்கு, திருப்பீடத்தின் நீதி மற்றும் அமைதி அவையின் தலைவர் கர்தினால் பீட்டர் அவர்கள் அளித்த ஒரு செய்தியில் இவ்வாறு கூறினார். “ஒரே மனித குடும்பம், அனைவருக்கும் உணவு” என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்கின் மையப்பொருள், “ஒரே குடும்பமாக நாம் வாழும்போது, அனைவருக்கும் உணவு கிடைக்கும்” என்பதை நினைவுறுத்துகிறது என்று தன் செய்தியில் சுட்டிக்காட்டிய கர்தினால் டர்க்சன் அவர்கள், குடும்ப உணர்வு நம்மிடையே குறைவதே உலகில் நிலவும் பசிக்கு முதல் காரணம் என்றும் குறிப்பிட்டார். உலகில் நிலவும் பசியைக் குறித்து நாம் அனைவரும் பல வழிகளில் அறிந்துள்ளோம் என்று கூறிய கர்தினால் டர்கசன் அவர்கள், ஐக்கிய நாடுகள் நிறவனம் உட்பட, உலகின் பல அமைப்புக்கள் பசியை உலகிலிருந்து போக்குவதையே மில்லென்னிய இலக்குகளில் முதன்மையாக ஏற்றுக்கொண்டுள்ளன என்பதையும் சுட்டிக்காட்டினார். புத்தாண்டு நாளன்று திருத்தந்தை வெளியிடவிருக்கும் உலக அமைதி செய்தியில் பசியைப் போக்கும் முயற்சிகள் குறித்து சிறப்பான செய்தி வெளியிடுவார் என்பதையும் கர்தினால் டர்க்சன் தன் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## சிந்தனை சிந்தனை

“குடி” மகன்களே ஒரு நிமிடம்



*ஒரு பெரிய குடிகாரனாக இருந்து பின்பு மனம்மாறிய இளைஞன் இவ்வாறு கூறினான். என்னுடைய அனுபவத்தில் நான் சொல்லுகிறேன். உடம்பு வலியை போக்க குடிக்கிறது, அன்றைக்கு வலியை மறக்க வைக்கும். ஆனால் மறுநாள் காலை அந்த உடம்பு வலி இரண்டு மடங்காக அதிகரிக்கும். அதனால் அந்த வலியை போக்க இரண்டு போத்தல் குடிக்கணும்” இனி குடிப்பது உடம்பு வலி போக்க என்று சொன்னால் அது ஒரு நொண்டிச் சாக்கு. ஆக போதை உடம்பு வலிபோக்கும் மருந்தல்ல உயிரைக்....*

***கொஞ்சம் கொஞ்சமாய் கொல்லும் விஷம்.***

## 01ம் பக்கம் – மரியன்னை ஆண்டில்...

தூய ஆவியானவர் முதல் திருச்சபையை உருவாக்கும் நேரத்தில் மரியன்னை சீடர்களோடு செபத்தில் ஆழந்திருந்தார் என்பதை மறந்தும், செயல்படுகின்ற இந்த பைபிள்காரர் பைபிளை மறுதலிக்கின்றார்கள் என்பதை மொத்த மக்களும் புரிந்துக் கொண்டவர் போல் மீண்டும் குருக்களை அணுகி நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து திருச்சபையில் இணைந்து நல்ல கத்தோலிக்கராய் வாழ முற்படுகிறார்கள் என்பது எமக்கு சந்தோஷம்.

## 01ம் பக்கம் – எமது இலங்கை...

ஒரே தேச மக்களாக வேற்றுமைகளைத் துறந்து சிந்தித்தாலொழிய நாம் பெற்ற சுதந்திரத்திற்கு அர்த்தமிருக்காது. எமது நாட்டை நாம் கட்டியெழுப்ப வேண்டுமானால் எம்மிடம் உள்ள சிந்தனைகளில் வித்தியாசம் இருப்பினும் அவற்றை நாம் தடையாக எண்ணாது நல்ல சிந்தனைகளுக்கு மதிப்பளித்து மக்களின் வாழ்வு நிலையில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும்.

இதற்கு மனங்கள் மாற வேண்டும். ஒருவர் ஒருவர் மதிப்பளிப்பது எமது நாட்டில் உண்மையான சமாதானத்தை கட்டியெழுப்ப வேண்டும். நாம் பெற்ற சுதந்திரத்தை மீண்டும் அன்னியர் கையில் விடாது ஒரே சகோதரத்துவத்தோடு எமது நாட்டை கட்டியெழுப்பி அனைவரையும் கேட்டு நிற்கின்றோம் எமது நாட்டிற்காக விசுவாசிகள் அனைவரையும் மன்றாட வேண்டுகின்றோம்.

எமது இலங்கை தாய் திரு நாட்டை இறைவன் ஆசீர்வதித்து வழநடத்துவாராக.

## 01ம் பக்கம் – தூய யோசேப்பின்...

அதனைத் தொடர்ந்து அவரது பெயர் நற்கருணை மன்றாட்டில் இணைக்கப்பட்டது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு பிற்பாடு புதிதாக மூன்று நற்கருணை மன்றாட்டுக்கள் முறையே 2,3,4 என்று உருவாக்கப்பட்டன. துரதிஷ்ட வசமாக இவைகளிலும் தூய யோசேப்பின் பெயர் இணைக்கப்படவில்லை. இத்தூ-யவரின் பெயர் புதிய நற்கருணை மன்றாட்டுக்களில் சேர்க்கப்பட வேண்டுமென உலகளாவிய ரீதியில் வேண்டுகோள் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து நம் ஓய்வுபெற்றத் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் இதனை நடைமுறைப்படுத்த விரும்பினார். இருப்பினும் அது கைகூடவில்லை நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2013ம் ஆண்டு வைகாசி மாதம் 1ம் திகதியிலிருந்து தூய யோசேப்பின் பெயரை நற்கருணை மன்றாட்டு 2,3,4ல் தூய கன்னிமரியாவின் பெயரைத் தொடர்ந்து இணைக்கும்படியாக கேட்டுக் கொண்டார். ஆகவே தான் இப்பொழுது திருப்பலியில் இடம்பெறும் நற்கருணை மன்றாட்டில் தூய யோசேப்பின் பெயர் இணைக்கப்பட்டுள்ளது. ஆகவே நற்கருணை மன்றாட்டு 2,3,4ல் தூய கன்னி மரியாளின் பெயரைத் தொடர்ந்து அவரது துணைவர் யோசேப்பு என்று கூறப்படுகின்றது.

## 01ம் பக்கம் – பொதுநிலையினருக்கான...

பங்குனி மாதம் 1ஆம் திகதி மாலை 3.00 மணியளவில் பேராயர் இல்ல ஜூபிலி மண்டபத்தில் இவ் விசேட கருத்தமர்வு இடம்பெறவுள்ளது. சகல பங்குகளிலுமுள்ள ஒவ்வொரு சபைகள், முன்னணிகள், கழகங்கள் சார்பாக குறைந்தது ஐந்து பேரானாலும் கலந்து கொண்டு உயர் மறைமாவட்டத்தில் கத்தோலிக்கருடைய “இருப்பும் பணியும்” என்ற விசேட கலந்துரையாடலில் இணைந்து, மறைமாவட்ட ரீதியில் எமக்குரிய பங்களிப்புப் பற்றிய தீர்மானங்களையும் எடுத்து செயற்பட இருப்பதால் தவறாது சமூகம் தருமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## 01ம் பக்கம் – மருத்திருப்பதிக்கான...

பக்தர்கள் அனைவரும் பக்தி பரவசமும், ஆன்மீக புத்தெழுச்சியும், கொள்ள கொழும்பு உயர் மறைமாவட்ட மரியன்னை ஆண்டுக்கான திருப்பயணக்குழு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. மேலதிக விபரங்களை உங்கள் பங்குத்தந்தையை தொடர்புக் கொண்டு அறிந்து ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

## 04ம் பக்கம் – இளைஞர்களின் வழிகாட்டி....

விண்ணகக் கடவுள் உங்களைப் பாதுகாப்புடன் வழிநடத்தி நலமே என்னிடம் கொண்டுவந்து சேர்ப்பாராக. அவருடைய தூதர் உங்களை நலமே வழிநடத்துவாராக” (5:17) என்று கூறுகின்றார்.

கடவுளின் துணையை நாடும்போது, அவரின் உதவியைத் தேடும்போது ஆண்டவர் தன் தூதர்களை அனுப்பி வழிநடத்தும் பல அனுபவங்கள் உண்டு. இறைப்பற்று கொண்ட மனிதர்கள் உலகெங்கும் கடவுளின் தூண்டுதல் பெற்ற மனிதர்கள் வழியாக உதவி பெறுவர்.

திக்கற்றச் சூழலில், நம்பிக்கையற்றச் சூழலில், என்ன செய்வதென்று அறியாத வேளைகளில் ஆண்டவர் தம் தூதரை அனுப்பி வழிநடத்துவார். நம்பிக்கை கொண்டு வாழ்வோர் இவ்வுண்மையை தங்கள் வாழ்வில் அனுபவித்து வருகின்றனர். திபா 18:6இல் இப்படி வாசிக்கிறோம். “என் நெருக்கடி வேளையில் நான் ஆண்டவரிடம் மன்றாடினேன். என் கடவுளை நோக்கிக் கதறினேன். தமது கோவிலினின்று அவர் என் குரலைக் கேட்டார்” குரலைக் கேட்டு உதவிடும் இறைவனைப் புகழ வேண்டும் என்று தி.பா 63:7 நமக்கு கூறுகின்றது. “நீர் எனக்குத் துணையாய் இருந்தீர். உம் இறக்கைகளின் நிழலில் மகிழ்ந்து பாடுவேன்.”

சமீபத்தில் ஓர் இடத்திற்கு மறையுரைக் கொடுக்கச் சென்றேன். பேருந்தில் பயணம் செய்யும்போது புதிய இடம, யார் நம்மை அழைத்துக்கொண்டு செல்லப் போகிறார்கள். வழி தெரியாத நிலையில், தொடர்புகொள்ள அலைபேசி இல்லாதச் சூழலில், வேறெந்த முகவரியும் தெரியாத நிலையில் என்ன செய்வதென்று சிந்தனையில் சென்று கொண்டிருந்தேன். நீண்ட நேரம் செபம். பேருந்தில் ஒரே இருக்கையில் மூலையில் அமர்ந்திருந்தவரைப் பார்த்து, வழக்கம்போல் வணக்கமும் புன்முறுவலும் கொடுத்துவிட்டு விவிலிய வாசிப்பைத் தொடர்ந்தேன். ஏறக்குறைய இரண்டு மணி நேரப் பயணம் முடிந்தது. என்ன செய்ததென்று யோசித்துக்கொண்டே விவிலியத்தை மூடிவைத்து, இறங்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தேன். அருகில் இருந்தவர் “நீங்கள் ஃபாதரா?” என்று கேட்டார், “ஆம்” என்று சொல்லி உரையாடினோம். இறுதியில் அவரே நான் செல்ல வேண்டிய இடத்திற்கு அழைத்துப் போய்விட்டார். ஆண்டவரின் வழிகாட்டுதல் எத்துணைப் பெருமைக்குரியது.

நம் வாழ்க்கைப் பயணங்களிலும் இறைவன் வழித்துணையாக வரவிரும்புகின்றார். “நான் சிறுமையுற்றவன், ஏழை: கடவுளே! என்னிடம் விரைந்து வாரும், நீரே எனக்குத் துணை, என்னை விடுவிப்பவர். என் கடவுளே காலந்தாழ்த்தாதேயும்” (திபா 70:5) என்று இறைவனின் துணையை நாடுவோர், இறைவனின் வழிகாட்டுதலையும், பாதுகாப்பையும் கண்டு மகிழ்ச்சி கண்டனர். அதேபோல் காண்பர் என்பதில் ஐயமில்லை.

தந்தையின் அறிவுரை கேட்டு, தந்தையின் வழிநடத்துதலில் புதிய வழிகாட்டியை சகோதரனாகப் பெற்ற தோபியா தன் பயணத்தை ஏற்பாடு செய்து புறப்படுகின்றார். தாய்க்கு தாங்க முடியாத கவலை. பணத்தை விட ஆண்டவர் தங்களுக்கு அருளிய வாழ்வே போதுமென்று கூறி, மகனின் பயணத்தை தடுக்க முயல்கின்றார் ஆனால் நல்ல தூதர் ஒருவர் தன் மகனுடன் செல்வதாகக் கூறி தோபித்து தன் மனைவியைத் தேற்றுகின்றார். நல்ல துணையுடன் செல்லும் மகன் அனைத்தையும் வெற்றியாக முடித்து இல்லம் திரும்புவார் என்று ஆறுதல் மொழி கூறுவதுடன், தன் மகனையும் ஊக்க மூட்டுகின்றார். புதிய சகோதரனாக மாறியுள்ள வழிகாட்டியின் மீது கொண்டுள்ள ஆழமான நம்பிக்கையையும் வெளிப்படுத்துகின்றார் (5:18-22). நம்பிக்கை தரும் வார்த்தைகளைக் கேட்ட தோபியா, வானதூதர் இரபேலுடன் பயணத்தை மேற்கொள்கின்றார் (6:1).


### மணமகன் தேவை



கொழும்பு நுகேகொடையை பிறப்பிடமாகக் கொண்ட 1988.12.05ஆம் திகதி பிறந்த வெள்ளை நிறைமுடைய 5'2" அங்குலம் உடைய O/L வரை படித்த றோமன் கத்தோலிக்க மதமுடைய எனது மகளுக்கு சுமாரான அழகுடைய 5'6" அங்குலம் உயரமுடைய படித்த நல்ல உத்தியோகத்தில் உள்ள றோமன் கத்தோலிக்க மணமகனை எதிர்பார்க்கின்றோம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் - 0719695071, 0721729736 திங்கள் முதல் சனிக்கிழமை வரை காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை தொடாபு கொள்ளவும்.

கத்தோலிக்க அச்சகம் கொழும்பு - 08. (N 5779)

### மணமகள் தேவை



R.C Aircraft Engineer 31 வயது மகனுக்கு கௌரவமான குடும்பத்தை சேர்ந்த மணமகள் தேவை. தொடர்பு கொள்ளவும் 0774233286

கத்தோலிக்க அச்சகம் கொழும்பு - 08. (N 5749)


### அகவை 50

03 02 1964



**திருமதி. சூசை திரேசா பர்னாந்து**

உம் அகவை 50தை நினைவு கூறும் இந்நாளில் உம் வாழ்வுக்காய் ஆண்டவர்க்கு நன்றி கூறுகின்றோம். நீர் நித்தமும் இறைவனில் இளைப்பாற இறைஞ்சுகின்றோம் நீரும் எமக்காய் மன்றாடும் (N 5758)

குடும்பத்தினர்

## மருத்துவக் குறிப்புகள்



# வாய்வுத் தொல்லை

மனிதன் தோன்றிய நாள் முதல் நோய்களும் பின் தொடர்ந்தே வருகின்றன. அதிலும் இன்றைய வாழ்வில் நோய்கள் தவிர்க்க முடியாதவைகளாவிட்டன. அவ்வப்போது சிலவகை நோய்களை நாமே வரிந்து கட்டிக்கொண்டு தத்து எடுத்து கொள்கின்றோம். அப்படிப்பட்ட நோய்களில் நம்மிடம் அதிகம் சொந்தம் கொண்டாடுவது வாயுப் பிரச்சினைகளும், அது சம்பந்தப்பட்ட நோய்களும்தான்.

எளிய ஆசனப் பயிற்சிகளைச் செய்வதோடு மாலையில் சிறிது தொலைவு நடந்து வருவது நல்லது. ஒரே வேளையில் பலவகைப்பட்ட உணவுகளை எடுப்பதை தவிர்த்து விடுதல் வேண்டும். பசி இல்லாதபோது பழ உணவுகளையும், நீராகரத்தையும் உட்கொள்ளலாம். ஒவ்வொரு வேளை உணவும் ஐந்து மணி நேர இடைவெளியில் இருப்பது நல்லது. பசித்துப் புசிக்க வேண்டும். பொதுவாக சாப்பாட்டின் இறுதியில் “இன்னும் கொஞ்சம் சாப்பிடலாம்” என்ற உணர்வு உள்ளபோதே எழும் எவரையும் வாயுக் கோளாறு நெருங்குவதில்லை.

வாயுத் தொல்லைக்கு ஏற்ற



அருமருந்து வெள்ளைப் பூண்டு. 4பல் பூண்டை தோலுரித்து சாப்பிடலாம் அல்லது அடுப்பில் வைத்து கருகும் அளவுக்கு சுட்டு, பின்னர் அதன் தோலை உரித்து பாலுடன் சேர்ந்து உண்ணலாம். வாயுத் தொல்லை இருப்பவர்கள் பூண்டு சாப்பிட்ட உடனேயே அதிலிருந்து விடுபட்டதை உணர முடியும். வேண்டுமானால் பூண்டு காரம் போக, மோர் அருந்தலாம். பொதுவாக உணவுக்குப் பயன்படுத்தும் குழம்பில் வெள்ளைப் பூண்டை அன்றாடம் சேர்த்துக் கொள்வது சிறந்தது.

பெண்கள் குழந்தை பெற்ற பின் அதிகளவு சோர்வு இருக்கும் என்பதால் வாரத்திற்கு 2 அல்லது 3 நாட்கள் பூண்டு குழம்பை சாதத்துடன் கொடுப்பார்கள். தவிர தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கு மிகவும் சிறந்ததாகும்.

எனவே, பூண்டை அன்றாடம் சிறிதளவாவது சேர்த்துக் கொள்ளப் பாருங்கள். வாயுத் தொல்லை, செரிமானக் கோளாறு இருப்பவர்கள் புளியைத் தக்காளி மற்றும் நெல்லிக்காயை பயன்படுத்தலாம். மிளகாய் காரத்திற்கு பதிலாக மிளகு மற்றும் இஞ்சியைப் பயன்படுத்துங்கள். நல்லெண்ணெய் மற்றும் நெய்யினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

இஞ்சியின் மகிமை அறிந்துதான் இப்பொழுது இந்திய சமையலில் அனைத்து உணவுப் பொருட்களிலும் இஞ்சி சேர்க்கப்படுகிறது. தினசரி மூன்று பல் வெள்ளைப் பூண்டு, ஒரு விரல் அளவு இஞ்சி சேர்த்து அரைத்து காய்ச்சிய கசாயம் காலை வெறும் வயிற்றில் குடிக்க வாய்வு தொந்தரவு நீங்கும். அதேபோல் ஜீரணக் கோளாறு, வாய்வு தொந்தரவு உள்ளவர்கள் துளசி இலையை தண்ணீர் ஊற்றி வேக வைத்து கசாயம் போல் அருந்தலாம்.

பால் பொருட்களில் யோகர்ட் சேர்த்துக்கொள்ளலாம். இது எளிதில் ஜீரணமாகும். அதேபோல் வெள்ளைப் பூண்டு சேர்த்துக்கொண்டால் வயிற்றில் உள்ள கெட்ட வாயுக்கள் வெளியேறிவிடும். வாயு தொந்தரவு இருக்காது. தேங்காய் தண்ணீர், இளநீர் போன்றவைகளை குடிக்கலாம். கேஸ் தொந்தரவு ஏற்படாமல் தடுக்கும்.

கேஸ் பிரச்சினை உள்ளவர்கள் காலிப்ஃபளவர், முட்டைகோஸ், புருக் -கோலி, பீன்ஸ் போன்ற உணவுகளை உட்கொள்ளக்கூடாது. பால் பொருட்கள் சோடா, கார்பனேட் பானங்கள், பீர் போன்றவைகளை உட்கொள்ளக்கூடாது என்று உணவியல் நிபுணர்கள் அறிவுறுத்தியுள்ளனர். மன அழுத்தம் இருந்தாலும் வாயுத்தொந்தரவு ஏற்படும். எனவே, எதற்காகவும் கவலைப்படாமல் மனதை ரிலாக்ஸ் ஆக வைத்துக் கொண்டாலும் கேஸ் பிரச்சினை ஏற்படாது.

# இறையியல் அறிவை வளர்க்க விரும்பும் நபர்கட்கு இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!

## அருளாளர் யோசேவ்வாஸ் தமிழ் இறையியலகம் நடாத்தும் இன்னுமோர் குறுங்கால கற்கை நெறி

கருப்பொருள் : திருவழிபாடு

விரிவுரையாளர் : அருட்திரு. அந்திரியாஸ் பர்னாந்து OMI

காலம் : மாசித்திங்கள் 22ஆம் சனிக்கிழமை முதல் தொடர்ந்து வரும் 10 சனிக்கிழமைகள்

இடம் : அக்குவைனஸ் தமிழ் இறையியல் விரிவுரை மண்டபம்

நேரம் : ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் மாலை 4 மணிமுதல் 6 மணிவரை

கற்கைநெறிக்கட்டணம் : ரூபாய் 500/- மட்டுமே

பதிவு விபரம் : 22.02.2014, மாலை 3 மணிமுதல் 4 மணிவரை - அக்குவைனஸ் தமிழ் இறையியல் விரிவுரை மண்டபம்

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

அருட்திரு. றெஜினோல் லூசியன் OMI
தமிழ் இறையியல் இயக்குனர்,
புனித அந்தோனியார் ஆலயம்,
தெமட்டகொடை, கொழும்பு – 09
தொ.பே : 011 – 2677511, 071 – 8295151,
077 – 5806832

கற்கைநெறியின் இறுதியிலே 80% மான விரிவுரைகளுக்கு சமூகமளித்த அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

(N5299)



# 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



உள்ளத்தில் நிரம்பி வழியும் நினைவுடன்
உன் பிரிவால் வாடி வதங்குகின்றோம் – உன்
அன்பு உள்ளம் கண்டு ஆண்டவன் அழைத்தானோ?
நீ எங்களைப் பிரிந்து **பதினோறாண்டு** ஓடி விட்டது
ஆயிரம் உறவுகள் இருப்பினும் **மைக்கல்** என்று
ஆசையுடன் அழைத்து மகிழ உறவொன்றில்லையே! – **மைக்கல்**
நாங்கள் மடியும் வரை உன் நினைவு எங்களை விட்டு நீங்காது என்றும்...



**உன் நினைவில் வாடும் குடும்பத்தினர்**

**றொசாரி மைக்கல் பர்னாந்து**

பிறப்பு 12.10.1975
இறப்பு 10.02.2003

இரங்கல் திருப்பலி : 10.02.2014 நேரம் : மாலை 6.00 மணிக்கு
இடம் : கொண்டாஞ்சேனை புனித லூசியாள் ஆலயம்

தகவல் : S. Rosary Fernando

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

| | 1 ½" x 1" single | 3" x 1"Double | 5" x 1" Trible |
|---|---|---|---|
| 1" | 350/= | 700/= | 1050/= |
| 1½" | 525/= | 1050/= | 1575/= |
| 2" | 700/= | 1400/= | 2100/= |
| 2½" | 875/= | 1750/= | 2625/= |
| 3" | 1050/= | 2100/= | 3150/= |
| 3½" | 1225/= | 2450/= | 3675/= |
| 4" | 1400/= | 2800/= | 4200/= |
| 4½" | 1575/= | 3150/= | 4725/= |
| 5" | 1750/= | 3500/= | 5250/= |
| 5½" | 1925/= | 3850/= | 5775/= |
| 6" | 2100/= | 4200/= | 6300/= |

| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா (திருத்தப்பட்டுள்ளது) | | |
| ¼ பக்கம் | 7750/= | 7000/= |
| ½ பக்கம் | 15500/= | 14000/= |
| முழுப்பக்கம் | 31000/= | 28000/= |
| வர்த்தக விளம்பரம் (திருத்தப்பட்டுள்ளது) | | |
| ¼ பக்கம் | 11500/= | 10000/= |
| ½ பக்கம் | 23000/= | 20000= |
| முழுப்பக்கம் | 46000/= | 40000/= |

வர்ணம் + 25 %

**திருமண சேவைகளுக்கு**
**1 தொடக்கம் 15 சொற்கள் வரை**
**ரூபா 500.00உம் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 8.00 வீதமும் அறவிடப்படும்.**

## தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.com

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை பீ.சீ.ஜீ எட்ரிச் றொட்ரிக்கோ, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்